
விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-எட்டு Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆனி 28 வெள்ளிக்கிழமை (12.07.2002) தொலைபேசி 3378 ஒலி 205

திருமணப் பட்டுப்
புடைவைகளின் கைராசியான
ஸ்தாபனம்
ரவி அன் ராஜ்
சில்க்ஸ்
77, பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்
T.P:- 021-2469

## முதல்வர் ஜெயாவின் சபதம் நிறைவேறியது



# ம.தி.மு.க செயலர் வை.கோ
# நேற்று சென்னையில் கைது!

## மதுரை மத்திய சிறையில் தடுத்துவைப்பு

(சென்னை)

**மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழக பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வை.கோபாலசாமி நேற்று மாலை 5.30 மணிக்கு சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தை விட்டு வெளியே வந்த போது போடோ சட்டத்தின் கீழ் தமிழக காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.**

**சென்னை விமான நிலையத்தில் வந்திறங்கிய வை.கோவை அவரது மனைவி, மகன், மத்திய அமைச்சர்கள் செஞ்சி ராமச்சந்திரன், கண்ணப்பன் ஆகியோர் வரவேற்றனர். விமான நிலையத்தைச் சுற்றிலும், விமான நிலையத்திற்கு வரும் முக்கிய பாதைகளிலும் காவல்துறையினர் குவிக்கப்பட்டிருந்தனர்.**

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகத் தமிழகத்தில் செயற்பட்டு வரும் ம.தி.மு.க பொதுச் செயலர் வை. கோபாலசாமி அமெரிக்காவில் தேவநேயபாவாணர் நிகழ்ச்சியில் கலந்து விட்டு நேற்று அதிகாலை மும்பை திரும்பி அங்கிருந்து சென்னை விமான நிலையம் வந்தடைந்த போது கைது செய்யப்பட்டார்.

மும்பை விமான நிலையத்தை வந்தடைந்த வைகோவை அங்கு வைத்து கைது செய்ய தமிழக அரசு விரும்பிய போது தனது மாநிலத்தில்

(08ம் பக்கம் பார்க்க)

சென்னை விமான நிலையத்தில் வந்திறங்கிய வைகோவை காவல் துறையினர் கைது செய்து அழைத்துச் சென்ற போது...

கைது செய்வதை எதிர்த்து மறியலில் ஈடுபட்டோரை கைது செய்து பேருந்தில் அழைத்துச் செல்வதை முதலாவது படத்திலும், கைது செய்வதற்காக விமான நிலையத்தில் சூழ்ந்திருந்த காவல் துறையினரை இரண்டாவது படத்திலும், வாகனத்தில் ஏற்றுவதற்கு முன் தொண்டர்களை நோக்கி கையை உயர்த்திக் காட்டுவதை மூன்றாவது படத்திலும் காணலாம்...





①



②



③





# இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்கு விடுதலைப்புலிகள் இன்றித் தீர்வில்லை

## கைதாவதற்கு முன் வை.கோ.பேட்டி

(சென்னை)
இலங்கையில் வாழும் தமிழர்
பிரச்சினைக்கு விடுதலைப்புலிகளின்
உதவியின்றி தீர்வு காண முடியாது.
இவ்வாறு ம.தி.மு.க.பொதுச் செய
லாளர் வை.கோபாலசாமி நேற்று
கைது செய்யப்படுவதற்கு முன்ன
தாக மும்பாயிலிருந்து சென்னைக்
குப் புறப்படு முன் பி.டி.ஐக்கு வழங்
கிய பேட்டியொன்றில் தெரிவித்துள்
ளார்.
அப்பேட்டியில் அவர் மேலும்
தெரிவித்ததாவது:
பாலஸ்தீனப் பிரச்சினையை எடுத்
துக்கொண்டால் பி.எல்.ஓ தொடர்
பின்றி தீர்க்கப்பட்டதா? அல்லது
வடக்கு அயர்லாந்து பிரச்சினைக்கு
தீவிரவாதிகள் பங்கு இன்றி தீர்வு
கிடைத்ததா? அதே போல் இலங்
கைத் தமிழர்களின் பிரச்சினையும்
விடுதலைப்புலிகளின் தலையீடின்றி
விவாதிக்கப்பட முடியாது.
விடுதலைப்புலிகளின் நிலைப்

(08ம் பக்கம் பார்க்க)

# புலி உறுப்பினர்களை கைது செய்தால் பதில் நடவடிக்கை எடுக்கப்படும்

## திருமலைத் தளபதி பதுமன் எச்சரிக்கை

(திருகோணமலை)
யுத்தநிறுத்த புரிந்துணர்வு உடன்
படிக்கையின் பிரகாரம் அரசியல்
பணிகளை மேற்கொள்ளச் செல்லும்
எமது உறுப்பினர்கள் தொடர்ந்தும்
கைது செய்யப்படுவார்களானால்
சூழ்நிலைக்கேற்ப பதில் நடவடிக்கை
எடுக்க நேரிடும் என விடுதலைப்புலி
களின் திருகோண்மலை மாவட்டத்
தளபதி பதுமன் எச்சரித்துள்ளார்.
நேற்றைய தினம் விடுதலைப்
புலிகளின் திருகோணமலை சம்பூர்
பணிமனையில் இடம்பெற்ற மாநாடு
ஒன்றில் உரையாற்றும் போதே
அவர் இவ்வாறு எச்சரித்துள்ளார்.
அவர் அங்கு தொடர்ந்து உரை
யாற்றுகையில் திருகோணமலை

(08ம் பக்கம் பார்க்க)

## உள்நாட்டு அமைச்சருக்கு எதிராக

# நம்பிக்கையில்லா பிரேரணை பாராளுமன்றில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர்
ஜோன் அமரதுங்காவிற்கு எதிராக
எதிர்க்கட்சியினர் நம்பிக்கையில்லா
பிரேரணையை பாராளுமன்றில் சமர்
பித்துள்ளனர்.
நாட்டில் குற்றச்செயல்கள் அதி
கரித்திருப்பதாகவும் அதற்கு உள்
நாட்டு அலுவல்கள் அமைச்சரே
பொறுப்பேற்க வேண்டும் என்றும்
குறிப்பிட்ட அமைச்சருக்கு எதிரான
நம்பிக்கையில்லா பிரேரணையை
எதிர்க்கட்சியினர் பாராளுமன்ற சபா

(08ம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் பாதுகாப்புத் தொடர்பாக

# அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷுடன் பிரதமர் ரணில் சந்தித்துப் பேசுவார்

(கொழும்பு)
அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்
டபிள்யூ புஷ் பிரதமர் ரணில் விக்
கிரமசிங்காவைச் சந்திக்க முயற்
சிப்பது இலங்கை போன்ற சிறிய
நாட்டுக்கு கிடைக்கும் பெரும் பேறா
கும்.
இவ்வாறு அரசியல் விவகார
அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்
தெரிவித்துள்ளார்.
அடுத்தவாரம் அளவில் அமெ
ரிக்கா சென்று ஜனாதிபதி புஷ்ஷை
பிரதமர் விக்கிரமசிங்கா சந்தித்துப்
பேசவுள்ளார்.
இச்சந்திப்பின் போது இருதலை
வர்களும் இலங்கையின் பாதுகாப்பு
சமாதான முயற்சிகளின் நிலைப்பாடு
மற்றும் பொருளாதார முயற்சிகள்
குறித்து விரிவாக ஆராயவுள்ளார்.
இவ்விடயம் குறித்து பத்திரிகை

(08ம் பக்கம் பார்க்க)

# யா.மாவட்ட ஆசிரியர்களின் பதவிஉயர்வுக் கடிதங்கள் விரைவில் கைவந்து சேரும்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் சேவையாற்றும் ஆசிரியர்களின் பதவி உயர்வுக்கான கடிதங்களை அடுத்த ஒரு மாதத்தில் நிறைவு செய்து அனுப்பி வைப்பேன் என வடக்குக் கிழக்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர், எஸ். பாலசிங்கம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தூதுக்குழுவிடம் உறுதியளித்துள்ளார்.

14/2000 இலக்கச் சுற்று நிருபத்திற்கமைவாக யாழ் மாவட்டத்திலுள்ள கல்வி வலயங்களில் இருந்து பல மாதங்களுக்கு முன் அனுப்பிய கடிதங்களுக்கு எவ்வித மான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை எனத் தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுக்குழு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் ஐ எம். இஸதீன் மாகாணக் கல்விச் செயலாளர் கே. சண்முகலிங்கம், மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளர் எஸ். பாலசிங்கம் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடிய போது எடுத்துக்கூறியது. அப்போதே மேற்கண்ட வாக்குறுதிகளை பாலசிங்கம் வழங்கியுள்ளார்.

சங்கத்தின் பொதுச்செயலாளர் த. மகாசிவம் தலைமையில் சிரேஷ்ட துணைப் பொதுச்செயலாளர் த.பஞ்சலிங்கம், யாழ் மாவட்டத் தலைவர் வ. கணேசமூர்த்தி யாழ் மாவட்டச் செயலாளர் க. குமாரசாமி ஆகியோர் கொண்ட குழுவே மாகாண அதிகாரிகளைக் கண்டு கலந்துரையாடியது.

இச்சந்திப்பில் சங்கத் தூதுக்குழு, சங்கம் யாழ். மாவட்டத்தில் நடாத்திய குறைகேள் சேவையில் ஏறக்குறைய 400 ஆசிரியர்களின் பதவி உயர்வுகளுக்கான விண்ணப்பங்கள் வலயக் கல்விப் பணிப்பாளர்களால் சிபார்சு செய்து அனுப்பப்பட்ட போதும் அவை தேங்கிக் கிடக்கின்றன. இதனால் சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் தமக்குரிய பதவி உயர்வுகளுக்கான கடிதங்கள் பெற முடியாத நிலையும், அத்துடன் அதற்குரிய உயர்ந்த சம்பளத்தைப் பெறமுடியாத நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதுவரை பதவி உயர்வுக் கடிதங்கள் கிடைக்காதவர்களை அடுத்த ஒருமாதத்தில் பதவி உயர்வுக் கடிதங்கள் கிடைக்க விட்டால், உடனடியாக சங்கத்தின் கிளைச் செயலாளர்களுக்கு ஊடாகத் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவம் கோரியுள்ளார்.

(உ)

# என்மீது தொடர்ந்துள்ள வழக்கை சட்டரீதியில் எதிர்கொள்வேன்

## மும்பாயில் வை. கோ. பேட்டி

(மும்பை)

தமிழக அரசு என் மீது தொடர்ந்துள்ள வழக்கை சட்டரீதியில் எதிர்கொள்வேன்.

இவ்வாறு ம. தி. மு. க. பொதுச்செயலாளர் வை. கோபாலசாமி தெரிவித்தார்.

அமெரிக்காவில் இருந்து நேற்று அதிகாலை மும்பை விமானநிலையத்தில் வந்திறங்கிய வை. கோவை, விமான நிலையத்தில் பத்திரிகையாளர்கள் பேட்டிகண்டனர்.

அப் பேட்டியின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அப்பேட்டியில்அவர் மேலும் தெரிவிக்கையில்:-

அரசியல் கட்சிகளின் ஜனநாயக உரிமைகளை நசுக்கும் விதத்தில் தமிழக முதலமைச்சர் செல்விஜெயலலிதா செயற்பட்டு வருகிறார். இதனை அனைவரும் அறிவர். என்மீது தொடரப்பட்டுள்ள வழக்கை சட்டரீதியில் நான் சந்திக்க தயாராகவுள்ளேன்.

மத்திய அரசுக்கு சங்கடம் ஏற்படும் வகையில் இப்பிரச்சினையில் மத்திய அரசைத் தலையிடுமாறு ஒருபோதும் கேட்டுக்கொள்ள மாட்டேன்.

ஏனெனில் மாநிலஅரசு விவகாரங்களில் மத்தியஅரசு தலையிடக் கூடாதென்ற கொள்கையுடையவன் நான் என்று தெரிவித்த வைகோ தனது கட்சித்தொண்டர்கள் தன்னைக் கைது செய்தால் கலவரத்தில் ஈடுபடமாட்டார்கள் என்றும் நம்பிக்கை வெளியிட்டார்.

(இ)

## துரைரட்ணசிங்கம் நேற்று எம்.பியாக பதவிஏற்பு

(கொழும்பு)

தமிழ்தேசியக் கூட்டமைப்பில் அங்கம்வகிக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேசியப்பட்டியல் எம்.பியாக இளைப்பாறிய கோட்டக் கல்வி அதிகாரி கே.துரைரட்ணசிங்கம் நேற்றுக்காலை பாராளுமன்ற சபாநாயகர் ஜோசப்மைக்கல் பெரேரா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

தமிழர்விடுதலைக் கூட்டணித்தலைவரும் தேசியப் பட்டியல் எம்.பியுமான எம்.சிவசிதம்பரம் காலமானதை அடுத்து ஏற்பட்டவெற்றிடத்துக்கே கே.துரைரட்ணசிங்கம் எம்.பியாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்

(வ)

### கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சங்கானை சண்டிலிப்பாய் உடுவில் தெல்லிப்பழை ஆகிய பிரதேசசெயலர் பிரிவுகளுக்கு உட்பட்ட விறகுகாலை, அரிவுகாலை 'உரிமையாளர்கள் மரத்தரகர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப3 மணிக்கு சண்டிலிப்பாய் ஐயனார்வீதியிலுள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறை அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது. (த)

### சிறுப்பிட்டி புத்தூருக்கு மின்சாரம்

(புத்தூர்)

புத்தூர் சிறுப்பிட்டிப்பகுதிகளுக்கு மிகவிரைவில் மின்சாரம் வழங்கப்படவுள்ளது

இதற்கு முன்னேற்பாடாக மின்சார சபையினரால்மின்னிணைப்பு தொடர்பான வேலைகள் நடைபெற்றுவருகின்றன.

நீண்டகால இடைவெளிக்குப் பின் இப்பகுதிக்கு மின்சாரம் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-235)

## தங்காலைச் சிறைச்சாலைச் சம்பவம் எதிர்க்கட்சி அரசியல் வாதிகள் பலருக்குத் தொடர்புண்டாம்

(கொழும்பு)

தங்காலைச் சிறைச்சாலையில் அண்மையில் இடம்பெற்ற வன்முறைச்சம்பவங்களுக்கும் எதிர்க்கட்சி அரசியல் பிரமுகர்கள் பலருக்கும் தொடர்புகள் இருப்பது புலனாய்வு விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இதுகுறித்து புலனாய்வுப் பொலிஸார் அறிக்கைஒன்றினையும் வெளியிட்டுள்ளனர்.

சம்பவம் இடம்பெறுவற்கு ஒருமாதகாலத்திற்கு முன்னர் மேற்படி எதிர்க்கட்சி அரசியல் வாதிகள் மற்றும் எதிர்க்கட்சி மாகாணசபை அங்கத்தவர்கள் ஆகியோர் மேற்படி சிறைச்சாலைக் கைதிகளைச் சந்தித்தமைக்கான ஆதாரங்களும் கிடைத்துள்ளன.

சிறைச்சாலையில் முன்னர் காணப்படாத ஆயுதங்கள் வேறுபொருட்கள் ஆகியன வன்முறைக்குப் பின்னர் மீட்கப்பட்டிருப்பதாகவும் அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை தொடர்புடையவர்கள்மீது உடனடியாக விசாரணைகளை ஆரம்பிக்குமாறு உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கபுலனாய்வுப் பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதுதவிர தமது பொறுப்புக்களைச் சரிவர நிறைவேற்றத் தவறிய தங்காலைச் சிறைச்சாலை அதிகாரிகளைஉடனடியாக இடைநிறுத்தும்படி சிறைச்சாலைகள் ஆணையாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (உ)

### விசாரணைகள் ஆரம்பம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக மனிதவுரிமை ஆணைக்குழு ஆணையாளர் தலைமையிலான குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

முதற்கட்டமாக நேற்று முன்தினம் இடம்பெற்றஇந்த விசாரணைகளில் வன்முறைச் சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட25இற்கும் மேற்பட்ட பொதுமக்களிடம் இவர்கள் விபரங்களைக் கேட்டறிந்துள்ளனர்

ஆணைக்குழுத் தலைவர் மனோகரி முத்தெட்டுகம வாழைச்சேனை மற்றும் கோரளை பிரதேசசெயலாளர்கள் பொலிஸ்அதிகாரிகள் ஆகியோர் இந்தவிசாரணைக் குழுவில் இடம்பெற்றுள்ளனர் (த)

### கிராம அபிவிருத்தி சங்கங்கள் புனரமைப்பு

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தற்போது பொது மக்கள் மீளக்குடியமர்ந்து வருவதைஅடுத்துஇப்பகுதி கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மீளவும் புனரமைக்கப்பட்டு வருவதாக கிராம அபிவிருத்திச் சங்க உத்தியோகத்தர் ஆர். ஜீவரட்ணம் தெரிவித்தார். (உ-43)


## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.

# ஏல விற்பனை

ஏலவிற்பனைத் திகதி 2002. 07. 17 காலை 10. 30 மணி (அலுவலக நேரத்தில் பொருட்களைப் பார்வையிடலாம்)

01. பனை வளை 16', 11½', 9½', (1, 10, 2எண்)
02. சலாகைகள்- 30துண்டுகள்
03. ஓடுகள்– 575எண்
04. சலாகைகள்- 6', 11', 7', 6' (36துண்டுகள்)
05. பனைமரம்- 5' 6' (8, 26எண்)
06. பனம் கப்பு- 7' - 10'' (3எண்)
07. கைமரம்- 4'' 2'' (8', 5', 7', 12') 22எண்
08. பனை வளை- 6'' 2'' (10', 8') 2எண்
09. அரிந்த மரம்- 4'' 2''6'' 6'' (6'- 3'', 10'- 0'') எண் 7
10. யன்னல் நிலைகள்- 5'' 3'' மரத்தினாலான இரண்டுவெளிகள் (8' - 3'', 8' - 0'') 2எண்
11. யன்னல் நிலைகள் 2'' 2½'' மரத்தினாலான மூன்று வெளிகள் (6' - 5'' 11' - 0') 2எண்
12. கதவு நிலைகள் 4'' 3'' மரத்தினாலான (15'- 0'' 8'- 6'')2எண்
13. கம்பி ¾'' 9 (யன்னல்)2எண்
14. கம்பி வலை 6'- 5'', 11'- 10'' 01எண்
15. வெற்றுத்தார் பெரல்
    172லீற்றர் கொள்ளளவுடையது- 60எண்
    200லீற்றர் கொள்ளளவுடையது- 100எண்
16. வேப்பமரம்

சித்திபெற்ற ஏலதாரர் உடன்பணத்தைச் செலுத்தி பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்வதுடன் பொருட்கள் அனைத்தையும் உடன் அப்புறப்படுத்தல் வேண்டும்.

க. கமலசேகரன் (ஜே பி .யு. எம்)

வலிதெற்கு பிரதேசசபை, சுன்னாகம். தலைவர்,

2002. 07. 10. (C- 4651)


## வடக்கின் மாபெரும் துடுப்பாட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

வடக்கின் மாபெரும்மோதல் என வர்ணிக்கப்படும் யாழ்மத்தியகல்லூரி யாழ் சென்ஜோன்ஸ்கல்லூரி அணிகளுக்கிடையிலான 96வது மாபெரும் துடுப்பாட்டப் போட்டி இன்று யாழ்மத்திய கல்லூரி மைதானத்தில் கோலாகலமாக நடைபெறவுள்ளது

இன்றும் நாளையும்இரு நாட்களாக நடைபெறவுள்ள துடுப்பாட்டப்போட்டி காலை 9.30மணிக்கு மத்தியகல்லூரி அதிபர் க.இராசதுரை சென்ஜோன்ஸ்கல்லூரி அதிபர் எஸ்.தனபாலன் ஆகியோரின் ஆசியுடன் ஆரம்பமாகவுள்ளது

மத்தியகல்லூரி அணிக்கு எஸ்.கார்த்தீபன் தலைமை தாங்கிவழிநடத்த சென் ஜேன்ஸ் அணிக்கு பி.லவேந்திராதலைமைதாங்குவார்.

கிறிக்கெற்ரசிகர்களின்உள்ளங்களை கொள்ளைகொள்ளும் வடக்கின் இக்கிறிக்கெற் போட்டியை கண்டுகளிக்க, நாட்டின் பல பாகங்களில் இருந்தும் தமிழ் சிங்கள முஸ்லிம் ரசிகர்கள் யாழ். நகரில் திரண்டுள்ளனர்.

இப்போட்டியில் சிறப்பாக விளையாடியசிறந்ததுடுப்பாட்டக்காரர்களாகத் தெரிவாகும் வீரர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்களை வழங்க அபாண்ஸ் நிறுவனமும், பாடசாலை பழைய மாணவப் பிரமுகர்களும் முன்வந்துள்ளனர்.

இதேவேளை குடாநாட்டு மாணவர்கள்தமது கிறிக்கெற் ரசனையை வெளிப்படுத்தும் வகையில் அணிகளாப் பிரிந்து சென்றல், சென்ஜோன்ஸ் அணிகளின் விசிறிகளாகமாறி, கோசமெழுப்புவதையும் வீதிகளில் காணமுடிகிறது. (இ)

### தேர்திருவிழா

(புத்தூர்)

புத்தூர் விஸ்வநாதர்ஆலய தேர்த்திருவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை9 மணிக்கும் தீர்த்தத்திருவிழா மறுநாள் திங்கட்கிழமையும் நடைபெறும்

(த-235)

## மணிக்கூட்டுக்கோபுர வீதி பாவனைநேரம் வரையறை

(யாழ்ப்பாணம்)

பொதுமக்கள் பாவிக்கத் திறந்துவிடப்பட்ட மணிக்கூட்டுக் கோபுரவீதியில்குறிப்பிட்டநேரம் தவிர்ந்தஏனைய நேரங்களில் வாகனப்போக்குவரத்திற்குத் தடைசெய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

இவ்வீதியால் தினமும் காலை6மணிமுதல் மாலை 7மணிவரைமட்டுமே துவிச்சக்கரவண்டிகள், ஒட்டோக்கள் மோட்டார்சைக்கிள்கள் மற்றும் வாகனங்கள் செல்வதற்கு அனுமதிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம)

# வலைப் பின்னலில் வர்த்தக வங்கி யாழ். கிளை நேற்று இணைப்பு

(யாழ்ப்பாணம்)

சொமர்ஷல் வங்கி யாழ். கிளையை, வங்கியின் ஏனைய கிளைகளுடன் வலைப் பின்னலில் இணைக்கும் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்றுவங்கியின் கணனி மயப்படுத்தப்பட்ட கட்டடத்தில் யாழ். கிளை முகாமையாளர் எஸ்.ரவீந்திரன் தலைமையில் நடைபெற்றது.

வங்கியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஏ. எல். குணரத்னவைபவரீதியாக இதனை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில், பிரதிப் பொதுமுகாமையாளர்களான டபிளயூ ஆர்.எம்.ஆர்டயஸ், எம். என். ஜே. ஜயரத்தின, உதவிப் பொதுமுகாமையாளர் எல். டி. பண்டார நாயக்க, கொமர்ஷல் வங்கியின் யாழ். கிளை முகாமையாளர் ரவீந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சர்வ மதத் தலைவர்கள் ஆசியுரைகளை வழங்கினர்.

மற்றும், அரச அதிபர் கே. சண்முகநாதன் அரசாங்க அதிபர், வங்கியின் பிரதி நிதிகள், உத்தியோகத்தர், வாடிக்கையாளர் என பலரும் கலந்து கொண்டனர்.

(உ-6)

# சுமார் 25 ஆயிரம் வெடிப்பொருட்கள் பளைப் பகுதியில் இதுவரை மீட்பு

(திருநெல்வேலி)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பளைப் பகுதியில் இதுவரை சுமார் 25 ஆயிரம் வெடிப்பொருட்களை மீட்டிருப்பதாக மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவின் பளைப் பகுதிப் பொறுப்பாளர் கு. ஜெயானந்தன் தெரிவித்தார்.

மீட்கப்பட்ட வெடிப் பொருட்களின் விபரம் வருமாறு, 60 மி.மீ. எறிகணை-16 ஆயிரம், 82 மி.மீ. எறிகணை- 2 ஆயிரத்து 500, 81 மி.மீ. எறிகணை- 2 ஆயிரத்து 200, 40 மி.மீ. எறிகணை- 700, மிதிவெடி- 3 ஆயிரத்து 840, கைக்குண்டு -ஆயிரத்து 140, டொங்கான் 520.

மேற்படி பிரிவினர், பளை மத்திய கல்லூரி உள்ளிட்ட பல்வேறு இடங்களிலும் வெடிப்பொருட்கள் மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

(உ-43)

# பளைப் பகுதியில் தபால் சேவை ஸ்தம்பிதம்

(திருநெல்வேலி)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள பளை, மருதங்கேணிப் பகுதியில் பொதுமக்கள் மீளக்குடியமர்ந்து வருவதையடுத்து இப்பகுதி அரச திணைக்களங்கள்மீளஇயங்க ஆரம்பித்துள்ளன.

எனினும் தபால் திணைக்களம் இயங்கவில்லையாதலால் இப்பகுதி மக்கள், அரச திணைக்களங்கள் கடிதத் தொடர்பு துண்டிக்கப்பட்ட நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

இப்பகுதி தபால் நிலையத்தை மீள் இயக்குமாறு தபால்மா அதிபருக்கு வெகுஜன அமைப்புகள் கடிதம் அனுப்பியுள்ளன.

அக் கடிதத்திற்கு சாதகமானபதில்கள் ஏதும் கிடைக்கவில்லைஎன அவ் அமைப்புகள் கவலை தெரிவித்துள்ளன.

(உ-43)

# யாழ். மத்திய பஸ் நிலையத்தில் 6 மலசல கூடங்களை மாநகரசபை அமைக்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் மக்கள் நலன்கருதி யாழ்.மாநகர சபையால் 6 மலசல கூடங்கள் அமைக்கப்படவுள்ளன.

மேற்படி மலசல கூடங்கள் அமைப்பதற்கான நிதியினை யாழ்ப்பாணத்திலிருந்து கனடா சென்று வாழ்ந்து வரும் பிரஜை ஒருவர்கொழும்பில் வைத்து யாழ்.நகரமுதல்வர் செ.கந்தையனிடம் கையளித்துள்ளார்.

(ஷ-19)

# உரிமத்தகடு வழங்கல்

(மானிப்பாய்)

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையினால்இவ் ஆண்டுக்கான துவிச்சக்கரவண்டிஇலக்கத்தகடுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இலக்கத் தடுகளை இதுவரை பெறாதவர்கள் உடனடியாக பிரதேசசபை தலைமைக்காரியாலயத்திலோ அல்லது அவரவர் பகுதி பிரதேச சபையின் உப அலுவலகங்களிலோ பெற்றுக் கொள்ளும்படி பிரதேசசபை தலைவர் வெ.அன்ரன்ஜோண்சன் அறிவித்துள்ளார்.

(ஷ-232)

# மாதிரி பனந்தோட்டம் மீளவும் இயங்கும்

(திருநெல்வேலி)

வடமராட்சிகிழக்கு மாமுனைப்பகுதியில், முன்னர் இயங்கிவந்த பனை அபிவிருத்திச்சபையின் மாதிரிப் பனந்தோட்டம் அடுத்த மாதம் முதலாம் திகதியிலிருந்து மீளவும் வழமைபோல் இயங்கவுள்ளது என பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் பொ. சிவபாதம் தெரிவித்துள்ளார்.

இப்பகுதியில் மிதிவெடி, பொறிவெடி எதுவும் இல்லை என உறுதிப்படுத்திய பின்னரே அலுவலகத்தை மீளஇயக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

(உ-43)

# வடமராட்சி கிழக்கு முன்பள்ளிகள் செயலிழப்பு

(மந்திகை)

வடமராட்சிகிழக்கில் உள்ள முன்பள்ளி நிலையங்களை மீள இயக்குவதற்கு உதவி புரிய பொதுஅமைப்புக்களோ அன்றி நிறுவனங்களோ எவையும் முன்வராமையால், அவை தொடர்ந்தும் இயங்காது இருந்து வருவதாக கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இப்பகுதியில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர்ந்து வருவதையடுத்து முன்பள்ளிகளைஉடன் இயக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது.

இருப்பினும், சேதமடைந்த முன்பள்ளிகளைத் திருத்துதல் தளபாடங்கள் கொள்வனவு செய்தல், மற்றும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு வழங்கல் என்பவற்றுக்கான நிதியை வழங்க எந்த நிறுவனமும் முன் வரவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

(உ-23)

# மின்சாரசபை அசமந்தம்

(மானிப்பாய்)

மாதகல் பகுதிகளிலுள்ள மின் பாவனையாளர் பெரும்பாலானவர்களுக்கு இது வரை மின்மானிகள் பொருத்தப்படவில்லையென புகார் தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து பல முறை இலங்கை மின்சாரசபை சுன்னாகம் காரியாலயத்திற்கு எழுத்து மூலம்பலமுறை விண்ணப்பங்கள் அனுப்பியும் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப் படவில்லை தற்போது இவ் மின்பாவனையாளர்களிடம்சராசரியாக 250-300 ரூபாவரை மின்கட்டணம் அறவிடப்படுகிறது. இதனால் குறைந்த மின் பாவனையைப் பெறுபவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள்.

(உ-232)

# குண்டு துளைக்காத ஐந்து வாகனங்கள் கண்டு பிடிக்கப்பட்டன

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்கவின் உபயோகத்திற்காக ஜேர்மனியில் இருந்து தருவிக்கப்பட்ட 48 குண்டு துளைக்காத வாகனங்களில் 5 கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இவற்றில் 4 எதிர்க்கட்சி எம். பி. க்களிடமும், ஒன்று ஆளும்கட்சி எம். பி. யிடமும் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

(உ)

# யாழ். மண்ணில்

''உங்கள் தலை விதியைத் தீர்மானிப்பது நிகழ் காலத்தில் நீங்கள் எடுக்கும் முடிவுகளே'' என்ற புதுமொழிக்கிணங்க உங்கள் ஒவ்வொருவரினதும் தலை விதியை- உங்கள் எதிர்காலம் ஒளிமயமாக விளங்க -நீங்களே தற்போது சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளீர்கள்

தகைமை

ஒவ்வொருஞாயிற்றுகிழமைகளிலும்வரும்ஞாயிறுஒப்சேவர் பத்திரிகையில் வரும் தொழில் வாய்ப்பு பக்கத்தினை நீங்கள் பார்த்தீர்களானால் அதில் வரும் தொழில் வாய்ப்புக்கள் பெரும்பாலும் தொழில்சார் கல்வித்தகைமையை அடிப்படையாக கொண்டவையாக விளங்குன்றன என்பதுஉங்களுக்குபுரியும், **Accountant Finance Manager Finance director, Managing Directors, Management consultant Executives, Management Trainees** போன்ற அதியுயர்மட்ட முகாமையாளர் பதவிக்கு எல்லாம் கேட்கப்படும் கல்வித் தகைமைகள் தொழில்சார் கல்வியும் அதனுடன் இணைந்தஅனுபவமும்ஆகும்.

எமதுஇளைஞர் சமுதாயமும் ஏனையோருடன் சரிநிகர் சமானமாய்ப் போட்டி போட்டு, தொழில் வாய்ப்புக்களைப்பெறக்கூடிய ஒருநிலைமையை **IPAS** நிறுவனமானது உருவாக்க முன்வந்துள்ளது. இந்நிறுவனம் ஆரம்பத்தில் கணக்கியல், சந்தைப்படுத்தல் ஆகிய துறைகளில் தனது செயற்பாட்டை ஆரம்பித்துள்ளது, எதிர்காலத்தில்காப்புறுதிவங்கித்தொழில் ஆகியவற்றிலும் தனது செயற்பாட்டை விரிவாக்க உள்ளது என அறியவருகின்றது.

இக்கற்கை நெறிகளை, கணித, விஞ்ஞான, வணிக, கலைப்பிரிவு மாணவர்களும் பயிலமுடியும். இக்கற்கை நெறிகளை பயின்று தேவையான தொழில்சார் அனுபவத்தினைப்பெற்றவர்கள, உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் பல ஆயிரக்கணக்கான பணத்தினைச்சம்பாதிக்க கூடியவர்களாக உள்ளனர். அத்துடன் கனடா நியுசிலாந்து, அவுஸ்திரேலியா, அமெரிக்கா, போன்ற நாடுகளுக்கும் புள்ளிமதிப்பீட்டு **(Point System)** அடிப்படையில் விசாவிற்கு விண்ணப்பிக்கவும் முடியும். இதற்காக 23-6-02 ஞாயிறு அன்று யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர்கூடத்தில் கொழும்பில் இருந்துவருகைதந்த, உயர்தொழில் தேர்ச்சி கொண்டபட்டயக் கணக்கறிஞர் குழு கருத்தரங்கினை நடித்தியது. அக்கருத்தரங்கில் நூற்றுக்கணக்கான மாணவர்களும், பெற்றோர்களும் கலந்து கொண்டு பயன் பெற்றார்கள் அக்கருத்தரங்கிற்கு வருகைதராதோர் அது பற்றியதகவல்களை பெற வேண்டுமாயின் நல்லூர் செம்மணிவீதி 10 இல் அமைந்துள்ள **IPAS** நிறுவனத்திற்கு சென்று அங்குள்ள பல்வேறு தொழில்சார் தகைமை பற்றிய கையேட்டினைப்பெற்று, விபரங்களை அறியக் கூடியதாக இருக்கும்.

# மனித உன்னதம்கண்காட்சி இன்று முதல் 3 தினங்கள்

(யாழ்ப்பாணம்)

வட பிராந்திய ஸ்ரீ சத்ய சாயி சேவா நிறுவன இளைஞர் பிரிவு நடத்தும் ''மனித உன்னதம்'' கண்காட்சி இன்று காலை 9 00 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்விப் பணிப்பாளர் வீ. இராசையாவும், சிறப்பு விருந்தினராக வலிகாமம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஆர். இருதய நாதனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேற்படி கண்காட்சி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமைவரை தினமும் காலை 9.00 மணி முதல் மாலை 5.00மணி வரை இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ)

# ஜனசக்தி அலுவலகம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

ஜனசக்தி காப்புறுதிக் கொம்பனியின் யாழ். மாவட்ட அலுவலகமானது, யாழ். வணிகர் கழக அலுவலக கட்டட மேல் மாடியில் நாளை காலை 9.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக வணிகத் துறைத் தலைவர் கே. தேவராஜாவினால் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

(உ)

# சுற்றுலா

(சுதுமலை)

யாழ். மாவட்ட மக்கள் நலனபுரிச் சங்கமும், படையணிகளும் பாடசாலை மாணவிகளுக்கான கல்விச் சுற்றுலா ஒன்றை இன்றுமுதல் 6 தினங்கள் ஒழுங்கு செய்துள்ளன.

11 பாடசாலைகளைச் சேர்ந்த 140 மாணவர்களும் 12 ஆசிரியர்களும் இக்கல்விச் சுற்றுலாவிற்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகவும்,

திருக்கோணேஸ்வரம், கண்டி, சிகிரியா, மிகிந்தலை, கதிர்காமம் மற்றும் கொழும்பின் பல முக்கிய இடங்களிற்கும் இம்மாணவிகள் அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

(உ-252)

# முதல்வரின் முயற்சியால் யாழ். மாநகரசபைக்கு பல்வேறு உதவிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு, குருநாகல் மாநகர சபை முதல்வர் நிமல் சந்திர சிறிடிசில்வா இருசில்லு உழவு இயந்திரங்கள்இரண்டை அன்பளிப்பாக வழங்கவுள்ளார்.

அண்மையில் யாழ். நகர முதல்வர் குருநாகல் நகர முதல்வரைச் சந்தித்து யாழ். மாநகரசபையில் நிலவும்குறைபாடுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தியதன் பிரகாரம் இவற்றைவழங்க இணக்கம்காணப்பட்டுள்ளது.

மேற்படி புதிய உழவு இயந்திரங்கள் இரண்டும் இம்மாத இறுதிப் பகுதிக்குள் தரை வழிப்பாதையூடாக கொண்டு வரப்பட்டு பயன்படுத்தப் படவுள்ளன.

இதேவேளை, நீர்கொழும்பு மாநகரசபை யாழ். மாநகர சபையின் பணிகளுக்கு வேண்டிய பல பொருட்களையும் வழங்க இணக்கம் தெரிவித்திருப்பதாக யாழ். நகரமுதல்வர் செ. கந்தையன் தெரிவித்தார்.

(உ-19)

# திருவாசக விழா

(யாழ்ப்பாணம்)

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி இந்து மன்றத்தினரால் நடத்தப்படும் திருவாசக விழா இன்று காலை 9.00 மணிக்கு கல்லூரியிலுள்ள சோமாஸ்கந்தர் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் 'இப்பிறப்பு அறுத்தெமை ஆண்டருள் புரியும் எம்பெருமான்' என்ற தலைப்பிலும், சைவப் புலவர் கா. கமலநாதன் 'திருவாசகத்தில் சைவசித்தாந்தக் கருத்துக்கள்' என்ற தலைப்பிலும் உரையாற்றவுள்ளனர்.

(உ)

### இந்திய மீனவர் இம்சை தாங்காது

# தொழிலுக்குச் சென்ற மீனவர் உடன் கரை திரும்பினர்

(மந்திகை)

வடமராட்சி வடக்கு கடல் பிரதேசத்தில் கடற்றொழிலுக்குச் சென்ற 25 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் இந்திய மீனவர்களின் அச்சுறுத்தல் காரணமாகக் கடலிலிருந்து திரும்பிய சம்பவம் கடந்த 8ஆம் திகதி இரவு இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு திரும்பிய இன்பருட்டிகடற்பகுதியைச்சேர்ந்த 8பேரும், முனைப்பகுதியைச் சேர்ந்த 7 பேரும் சுப்பர் மடத்தைச் சேர்ந்த 10பேரும் அப்பகுதி கடற்றொழிலாளர் சங்கங்களில் முறையிட்டுள்ளனர்

இதேவேளை, இந்திய மீனவர்கள் தமது வலைகளை அறுத்துச் செல்வதாகவும், கத்தி,வாள் போன்ற ஆயுதங்களைக் காட்டி தம்மைத் தொழில் செய்ய விடாது அச்சுறுத்துவதாகவும் அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கத்திடம் முறையிட்டுள்ளனர்.

இந்திய மீனவர்களால் எமது மீனவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள்தொடர்பாக அடுத்த பாராளுமன்றக் கூட்டத்தில்தாம் விவாதிக்கஇருப்பதாக சிவாஜிலிங்கம் எம்.பி. உறுதியளித்துள்ளார். (ஷ-23)

## வலுவிழந்தோர்க்கு புனர்வாழ்வளிக்கும் இருநாள் பயிற்சி பட்டறை

(யாழ்ப்பாணம்)

சமூக நலன்புரி அமைச்சு, தேசிய சமூக புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் வலுவிழந்தோருக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

இத்திட்டத்தோடு தொடர்புடைய 2 நாள்பயிற்சிப்பட்டறை, பிரதேச செயலர்கள், அரசசார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் மற்றும் சமூகசேவை உத்தியோகத்தர்கள் ஆகியோர்க்கு இம்மாதம் 27,28 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. (ஷ-6)

## மாணவர் அனைவருக்கும் இலவச சீருடை வழங்கக் கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் யுத்த அனர்த்தங்களினால் மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டிருப்பதனால் அங்குள்ள மாணவர்கள் அனைவருக்கும் இலவச சீருடை வழங்க வேண்டும் என பொது அமைப்புகள் பலவும் அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இதேவேளை, இலவச சீருடைகள்பெறுவதற்கான விண்ணப்பங்களை ஏற்கும் திகதி இம் மாதம் 26 ஆம் திகதிமுடிவடையவிருப்பதனால் மாணவர்கள் ஒவ்வொருவரும் தத்தம் பிரதேச செயலர்களுக்கு உடன் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளனர். (வ)

## மீளக்குடியமர்வோர் நாவற்குழி வீடுகளில் திருட்டில் ஈடுபடுகின்றனர்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி பகுதிகளில் மக்கள் மீண்டும் மீளக்குடியமர்ந்ததை அடுத்துஅப்பகுதி ஆட்கள் இல்லாத வீடுகளில் கதவுகள், யன்னல் கம்பிகள், வீட்டுக்கூரைகள், ஓடுகள் போன்றவற்றை மீளக்குடியமர்ந்தவர்கள் திருடிவருவதாக அப்பகுதி மக்கள்விசனம் தெரிவித்துள்ளனர்.

இத் திருட்டுகள் தொடர்ந்து வருவதை அடுத்து இம் மக்கள் அச்சம் அடைந்துள்ளனர். (ஷ-6)

## காவலூரில் மக்கள் வங்கி நடமாடும் சேவை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை மக்கள் வங்கிக் கிளையின் நடமாடும் சேவை ஒவ்வொரு புதன் கிழமையும்நயினாதீவில்நடைபெற்று வருகின்றது.

நயினாதீவுநாகபூசணி அம்மன் ஆலய அறங்காவலர் சபை மண்டபத்தில் ஒவ்வொரு புதன்கிழமையும் மு.ப.10.00மணிமுதல் வங்கிச் சேவை இடம் பெறும் என ஊர்காவற்றுறை மக்கள் வங்கிக் கிளையின் முகாமையாளர் கோ. சற்குணபாலன் தெரிவித்துள்ளார்.

மேற்படி நடமாடும்சேவையில் சேமிப்பு வைப்பு,நிலையான வைப்புக்களை ஏற்பதுடன் கடன்வசதிகளுக்கான ஆலோசனைகளும் பெறமுடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஷ-75)

## வாரத்தில் 2 தினங்கள் இலவச மருத்துவ முகாம்

(மந்திகை)

வடமராட்சி கிழக்கில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் நலன்கருதி பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் வாரத்தில் இரு தினங்கள் இலவச மருத்துவ முகாம் நடத்தப்படவுள்ளது.

இப்பிரதேசத்தில் சுமார் 2 ஆயிரத்து 100 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்த நிலையிலும் வைத்தியசாலைகள் எவையும் இயங்காமையால் மக்கள் வைத்திய வசதிகளைப் பெற சிரமப்பட்டு வருவதனைக் கருத்தில் கொண்டே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கியூடெக் நிறுவனமும் அண்மையில் மருத்துவ முகாம் ஒன்றினை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-23)

## குடாநாட்டு மீனுக்கு கிராக்கி

(மந்திகை)

யாழ். குடாநாட்டில் பிடிக்கப்படும் மீன்கள் நீண்டகால இடைவெளியின் பின் தென்னிலங்கையிலிருந்து வரும் தனியார் வியாபாரிகளால் கொள்வனவு செய்யப்பட்டு வருவதால் மீன்களுக்குபெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் கண்டி வீதி மக்கள் பாவனைக்கு விடப்பட்டதை அடுத்துபெருமளவிலான வர்த்தகர்கள் யாழ். குடாநாட்டிலுள்ள கரையோரப் பகுதியில் மீன்பிடி துறைகளிலேயே கொள்வனவில் ஈடுபட்டுள்ளனர். (உ-23)

## இராசி பலன்

(12/7/2002)

(ஆனி 28, வெள்ளி)

துதியை பி.ப. 1.27 வரை
பூசம் காலை 7.54 வரை
ராகுகாலம் - 10.29 - 11.59
நல்லநேரம் - 5.59 - 7.29

**மேடம்**

மனச் சஞ்சலம், சகோதரர் உதவி, அதிக பிரயாசை, சிறு வியாதி.

**இடபம்**

தெய்வ தரிசனம், காரிய நன்மை, பிரயாண நன்மை, பொருள் சேர்க்கை.

**மிதுனம்**

குடும்ப மகிழ்ச்சி, தனவிரயம், நிலைக்கேடு, காரிய தாமதம்.

**கடகம்**

நல்ல வரவேற்பு, தெய்வ சிந்தை, இஷ்ட சித்தி, தொழில் நன்மை.

**சிங்கம்**

பெண்கள் நட்பு, காரிய அலைச்சல், உணர்ச்சி வசப்படல். தொழில் கஷ்டம்.

**கன்னி**

முயற்சி நிறைவேறும், பெரியோர் நட்பு, பொருள் சேர்க்கை, உடல் நலம்.

**துலாம்**

அதிகாரம், முயற்சி கைகூடும், மேன்மை, புதிய முதலீடு.

**விருச்சிகம்**

பிரயாணம்,புதியசிந்தனை, உடல் நலக் குறைவு, காரிய தாமதம்.

**தனுசு**

கலகம், காரிய தடங்கல், அமைதிக் குறைவு, விபத்து.

**மகரம**

பொருள் சேர்க்கை, தர்மம், தெய்வ தரிசனம்,எடுத்த காரியம் கைகூடும்.

**கும்பம்**

இலட்சுமிகரம், காரிய நன்மை, தொழில் மேன்மை, நல்லோர் உதவி.

**மீனம்**

செல்வாக்கு குறைவு,ரோக நிலை, முயற்சி தாமதம், பிரயாண பயம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

**வளவன்**

## மருந்துக் கடைகளுக்கு அபராதம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப் பகுதியிலுள்ள இரண்டு மருந்துக் கடைகளில் பொது மக்கள் பார்வைக்கு விலைப்பட்டியல் வைக்கப்படாதமை, செயலக விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டது.

இதனை அடுத்து அவற்றின் உரிமையாளர்களுக்கு எதிராக யாழ். நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்த போது தலா ஆயிரம் ரூபா குற்றப் பணம் செலுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஷ-6)

## பாகிஸ்தான் வர்த்தக அமைச்சர் கொழும்பில்

(கொழும்பு)

பாகிஸ்தான் வர்த்தக கைத்தொழில் வாணிப அமைச்சர் அப்துல் காதர் நேற்று முன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் இலங்கைக்கும் பாகிஸ்தானுக்குமிடையிலான வர்த்தக உறவுகள் பற்றி விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

அன்று மாலை வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்காவையும் அவர் சந்தித்துப்பேசியுள்ளார். (த)

### விமான உதிரிப்பாக இறக்குமதி

## தமிழரான சந்தேக நபர் பிணையில் விடுவிப்பு

(கொழும்பு)

விமான உதிரிப்பாகங்களை சட்ட விரோதமாக இறக்குமதி செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைதான கஜேந்திரபிரசாத் என்பவரை 10ஆயிரம் ரூபா பிணையில் செல்ல கொழும்பு பிரதம நீதவான் அனுமதி வழங்கியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதியை இவர் பெறவில்லை என்பது இவருக்கெதிரானகுற்றச்சாட்டு.

கொழும்புபிரதம நீதிவான் ஹெய்யந்தொடுவ இவரை பிணையில் செல்ல அனுமதி அளித்ததுடன் பொறுப்பு வாய்ந்த மூவர் 5 இலட்சம் ரூபா பிணையில் கையொப்பமிட வேண்டுமெனவும்உத்தரவிட்டார்.

எதிரி ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் பொலிஸ் நிலையம் சென்று அங்கு கையொப்பமிட வேண்டுமெனவும் நீதிவான் உத்தரவிட்டார்.

எதிரியின்சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத் தரணி எட்லி பெரேரா தமது கட்சிக்காரர் பயங்கரவாதத் தடைச் சட்டத்திலோ அல்லது அவசர கால சட்டத்திலோ கைது செய்யப்படவில்லை எனவும் இவரது பிணைமனு மறுக்கப்படுவதற்கு நியாயமான காரணங்கள் எதுவும் பொலிஸ் தரப்பில் காட்டப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டினார்.

இதனைத் தொடர்ந்தே நீதிவான் எதிரியைபிணையில் செல்ல அனுமதிவழங்கினார்.

ஜனாதிபதி சட்டத்தரணி எட்லிபெரேரா,சட்டத்தரணி இளையதம்பி தம்பையா ஆகியோர் சட்டத்தரணி ஆ.ராஜகேசரியின் அனுசரணையுடன் ஆஜரானார்கள். (உ)

## மேயரின் பாவனைக்கு ஒட்டோ

(நெல்லியடி)

யாழ். மாநகரசபை முதல்வரின் பாவனைக்கென ஒட்டோ ஒன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாநகர முதல்வர் செ. கந்தையன் அண்மையில் கொழும்பு சென்றபோது இதனைக் கொள்வனவு செய்துள்ளார்.

இதேவேளை ஒட்டோவை இங்கு சேர்ப்பிப்பதற்கு மாநகரசபை சாரதிஒருவர் கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

ஓரிரு தினங்களில் இது யாழ். மாநகரசபையை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஷ-247)

## குழந்தை வைத்திய நிபுணர்

(சுதுமலை)

நாளை சனிக்கிழமை முதல் சங்கானை அரசினர் வைத்திய சாலையில் குழந்தை வைத்திய நிபுணர் ஒருவர் கடமையாற்ற உள்ளார்.

இவ் வைத்திய நிபுணர் மாதத்தில் இரு சனிக்கிழமைகள் காலை 9.00 மணி தொடக்கம் கடமையாற்றுவார்.

சங்கானை அரசினர் வைத்திய சாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். யோகராஜா எடுத்த நடவடிக்கையை அடுத்து மேற்படி குழந்தை வைத்திய நிபுணரின் சேவை பெறப்படவுள்ளது. (உ-252)

## கரைச்சி பிரதேச சபையின் பணிகள்பழைய இடங்களில்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேசசபையின்முரசுமோட்டை உபஅலுவலகம் மீண்டும்முரசுமோட்டையில் ஆரம்பமாகியுள்ளது.

சத்ஜெய இராணுவ நடவடிக்கை காரணமாக தர்மபுரத்தில் இதுகாலவரை இவ் அலுவலகம் இடம் பெயர்ந்து இயங்கி வந்தது.

இதனுடன் தர்மபுரத்தில் இடம்பெயர்ந்து இயங்கி வந்த இலவச சித்தஆயுள்வேதவைத்தியசாலை பொதுநூலகம்ஆகியவையும் மீண்டும் முரசுமோட்டை பிரதேச சபைஉப அலுவலக வளாகத்தில்திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, ஸ்கந்தபுரத்தில் இடம் பெயர்ந்து இயங்கிவந்த கரைச்சிபிரதேச சபையின் உருத்திரபுரம் இலவசசித்த ஆயுள்வேதவைத்திய சாலை மீண்டும்உருத்திரபுரத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இவ் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியாக டாக்டர் திருமதி அமிர்தாகளரி திருலோகமூர்த்தி கடமையாற்றி வருகிறார். கரைச்சி பிரதேச சபையின் பொது நூலகமும் மீண்டும் கிளிநொச்சியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. (உ)

# இன்று ஒரு தகவல்

## அண்டை நாடுகளில் பரவிய இந்தியக் கலாசாரம்

வரலாற்றுத் தொன்மையும் பெருமையும் மிக்க பாரத நாட்டின் கலாசாரம் பல்வேறு நாடுகளில் பழங்காலத்திலேயே பரவியது அந்நாட்டு மக்கள் பாரத கலாசாரத்தின் பல்வேறு அம்சங்களை மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டனர். பாரசீகத்தில் எழுந்த சுபிஸ்ட் தத்துவம் பாரத நாட்டின் வேதாந்ததத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு உருவான தேயாம். இந்தியாவில் முஸ்லிம் ஆதிக்கம் ஏற்பட்டபின் அங்கிருந்து கணிதம், வானநூல் ஆகிய பல அறிவியல்கலைகளை அவர்கள் கற்றுச் சென்றனர். சீனா இந்தியாவிடமிருந்து புத்த சமயத்தை ஏற்றுக் கொண்டது. திபெத்தில் உள்ள லாமாமதம் புத்தமதத்தின் அம்சங்களைக் கொண்டதே, இலங்கை முழுவதும் இந்தியக் கலாசாரம் பரவியது. புத்தமதம் இங்கும் பரவியது. இலங்கையின் சிற்பமும், சிகிரியாவில் உள்ள ஓவியங்களும், இந்தியச் சிற்பக்கலையையும், ஓவியத்தையும் ஒட்டி அமைந்தவை, பர்மாவிலும் புத்தமதம் பரவியது. அங்கு 13 ஆம் நூற்றாண்டுவரை பாளி, சமஸ்கிருத எழுத்துக்கள் கையாளப்பட்டுவந்தன.

கி. பி. முதல் நூற்றாண்டில் இந்தோ-சீனாவின் பல பாகங்களில் இந்துக்களின் ஆதிக்கம் ஏற்பட்டது. புனான் என்பாரின் அரசு இந்து மதத்தை அடிப்படையாகக் கொண்டது. இந்தோ சீனாவின் ஒருபகுதியில் கம்புசுயப்புவர் எனும் இந்திய அரசர் ஆண்டதால் அதற்குக் கம்போடியா எனும் பெயர் உண்டாயிற்று, அங்குள்ள கோயில்கள் தென்னிந்திய சிற்பக் கலையை ஒட்டிக் கட்டப்பட்டவை. சூர்யவர்மனால் அங்கோரில் கட்டப்பட்ட விஷ்ணு கோயில் பிரசித்தி பெற்றதாம். கம்போடிய மன்னர்கள் வேதமதச் சடங்குகளை ஒட்டி யாகங்கள் செய்தனர். சம்பா (தென் அன்னம்) எனும் நாட்டின் அரசர்கள் சைவம் அல்லது வைஷ்ணவ சமயத்தைச் சார்ந்திருந்தனர்.

சையாமில் தாய்எனும் எழுத்துக்கள் இந்திய அறிஞரின் துணைகொண்டு கண்டுபிடிக்கப்பட்டவை. இந்து தர்ம சாத்திரத்தையொட்டி சையாம் அரசர்கள் தம் சட்டங்களை வகுத்தனர். தலைநகரான பாங்காக்கிலுள்ள கோயில்களில் இராமாயண நிகழ்ச்சிகள் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டிருந்ததனை இன்றும் காணலாம். சுமத்ராவில் கி. பி. 7 ஆம் நூற்றாண்டில் ஸ்ரீவிஜயர் எனும் இந்து மன்னர் ஆண்டார். அங்கே புத்தமதம் தழைத்தோங்கியது. ஜாவாவில் கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் சைலேந்திர வம்சம் ஆட்சிபுரிந்தது. புத்த மதத்தைச்சேர்ந்த சைலேந்திர அரசர்கள் வங்கத்தை ஆண்ட பாலர்களுடனும், சோழர்களுடனும் தொடர்பு கொண்டிருந்தனர். இவர்களுக்குப்பின் ஆண்டவம்சத்தினர் இந்துமதத்தைப் போற்றிவளர்த்தனர். ஜாவாவில் பல சிவாலயங்கள் கட்டப்பட்டன. பாலித்தீவில் இந்துமன்னர்கள் ஆண்டனர். கி. பி. முதல் நூற்றாண்டிலிருந்து இந்தியாவுக்கும், தென்கிழக்கு ஆசியநாடுகளுக்கும் வாணிபத் தொடர்பு பெருகியது. அந்நாடுகளில் இந்தியப் பழக்கவழக்கங்கள் பரவின. பல பெண்டிரை மணத்தல், வரதட்சணை வாங்குதல், சதி, அரிசியும் வெற்றிலை பாக்கும் உட்கொள்ளுதல், இறந்தோரை எரித்தல், கோழிச்சண்டை போன்ற இந்தியநாட்டுப்பழக்கங்கள் அந்நாடுகளிலும் பரவின.

நன்றி
சமூக அறிவுநூல் 10

## வீதி விபத்துக்களால் ஐந்து மாதங்களில் 141 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

இலங்கையில் ஒவ்வொரு நாலரை மணித்தியாலத்திற்கும் ஒருவர் என்ற வீதத்தில் விபத்தில் உயிரிழப்புகள் இடம்பெறுவதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் விபத்துப் பிரிவின் மதிப்பீடு தெரிவிக்கின்றது.

இவர்களில் 75 சதவீதத்தினர் 20-50 வயதினர். கடந்த 5 மாதங்களில் மொத்தம் 54 ஆயிரத்து 830 பேர் விபத்துக்களில்காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

விதிவிபத்துக்களில் மட்டும் 141 பேர் மரணமடைந்துள்ளனர். விதிவிபத்துக்களில் 11 சதவீதம் மதுபோதையில் வாகனம் ஓட்டுவதால் நிகழ்கின்றது என அம் மதிப்பீடு மேலும்தெரிவிக்கின்றது. (உ)

## வற் வரி சட்ட மூலத்தில் மீளாய்வு அவசியம்

### உயர்நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

பெறுமதி கூட்டப்பட்ட (வற்)வரி சட்ட மூலம்சம்பந்தமான உயர் நீதிமன்றத் தீர்ப்பை சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.

இந்தச் சட்டமூலம் அரசியல் யாப்பின் விதி இரண்டு பிரிவு ஒன்றுக்கு முரண்படுவதாக நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதாக சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

இதே போன்றே வற் சட்ட மூலத்தில் 20வது விதியில் 6 வது பிரிவு மீளாய்வு செய்யப்பட வேண்டும் என்று உயர் நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

இவற்றுக்கான திருத்தங்களை அரசு மேற் கொள்ளுமாயின் வற் சட்டமூலம் அரசியல் யாப்புக்கு முரண்படாது அமையும் என்று உயர் நீதிமன்றத் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டமா அதிபர் கமலசபேசன் இதனை திருத்துவதற்கு இணக்கம் தெரிவித்திருப்பதாகவும் சபா நாயகர் மேலும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறுமுறையை எதிர்த்து அரச சார்பற்ற நிறுவனங்கள், அமைப்புக்கள் என்பன உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் தீர்ப்புக்களையே உயர் நீதி மன்றம் அறிவித்துள்ளது. (உ-8)

## இலங்கை பொலிஸ் திணைக்கள ஊழல்களை அம்பலப்படுத்த ஆசிய மனிதவுரிமை ஆணைக்குழு பாடுபடும்

(கொழும்பு)

இலங்கைப் பொலிஸ் திணைக்களத்தின் ஊழல் சம்பவங்களையெல்லாம் அம்பலப்படுத்தி, அதனால் சோதனைக்குள்ளாகியிருக்கும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் கொட்டகதெனியாவுக்கு பக்கபலமாக நின்று வாதாட ஹொங்கொங்கிலிருந்து செயற்படும் மனிதவுரிமை ஆணைக்குழு முன்வந்துள்ளது.

கொட்டகதெனிய தெரிவித்த கருத்துக்களை பொலிஸ் மா அதிபரோ அல்லது உள்துறை அமைச்சரோ இதுவரை மறுக்கவில்லை எனத் தெரிவித்துள்ள ஆசிய மனிதவுரிமை ஆணைக்குழு, தான் நீண்டகாலமாகவே இலங்கையின் பொலிஸ் திணைக்களத்தை நன்கு அவதானித்து வந்ததாகவும், அது அடிப்படையான மாற்றங்களுக்கு உட்பட வேண்டுமென்றும் கூறியுள்ளது.

சமூகத்திற்கு ஏற்படக்கூடிய ஆபத்துகள் பற்றி மக்களை விழிப்படையச் செய்யும் பரந்த கடமைப்பாட்டுணர்வு உயர் பதவி வகிக்கும் ஒரு நபருக்கு அவசியம் என்ற வகையிலும், பதவிகளுக்குரியவேறு ஏதேனும் விசுவாச நிலைப்பாடுகளுக்கும் அப்பால் அதனை நிறைவேற்ற வேண்டுமென்ற நிலையிலும் ஒரு உயர் பதவி வகிப்பவரின் கடமையுணர்வை தாம் மெச்சுவதாகவும் அவ் ஆணைக்குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. (உ)

## விளையாட்டு மைதானத்திற்கு காணி கொள்வனவு

(கோப்பாய்)

கோப்பாய்நாவலர் வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்திற்கென பாடசாலைக்கு அண்மையிலுள்ள 20 பரப்புக் காணி பாடசாலை அபிவிருத்திச்சங்கம் மற்றும் நலன் விரும்பிகளின் உதவியுடன் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இதனால்பலகாலமாக நிலவி வந்த விளையாட்டு மைதானக் குறைபாடு நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவித்தியாலய அதிபர் கே.வி. குணசேகரம் தெரிவித்தார். (ஷ-79)

## ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு

(கோப்பாய்)

கோப்பாய்க் கல்விக் கோட்டத்தில் இம் மாதஆரம்பத்தில் தமது நாற்பது வருட ஆசிரிய அதிபர் சேவையிலிருந்து இரு அதிபர்கள் ஓய்வு பெற்றுள்ளனர்.

கோப்பாய் வடக்கு றோ.க.த.க பாடசாலை அதிபர் க. விநாயகலிங்கம், அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலய அதிபர் கு. பூபாலசிங்கம் ஆகியோரே ஓய்வு பெற்றுள்ளனர். (ஷ-79)

## மண் அகழ்வை தடுக்க கோரிக்கை

(அரியாலை)

அரியாலைப் பகுதியில் மண் அகழ்வதைத் தடுத்துநிறுத்தக் கோரி யாழ். மாநகரசபை உறுப்பினர் எஸ். ஜெயச்சந்திரன் யாழ்ப்பாண அரச அதிபரைக் கடித மூலம் கோரியுள்ளார்.

அக்கடிதத்தில், அரியாலைப் பகுதியில் அமைந்துள்ளமுள்ளி என்னும் பகுதியில் மணல் அகழ்வு மேற்கொள்ளப்படுவதால் மண்ணரிப்பு ஏற்படும் அபாயம் உள்ளது. மேலும் போக்குவரத்துப்பாதைகளிலுமுள்ள மணல் அகழ்ந்தெடுக்கப்படுகின்றது.

இதனால்பாதைகள்அழிந்து போக்குவரத்துப் பிரச்சினைகளும் ஏற்பட வாய்ப்புள்ளது மக்கள் மீளக்குடியமர இருக்கும் இவ்வேளையில் இது போன்ற செயல்கள் மக்களை மேலும் அசௌகரியங்களுக்குள்ளாக்குவதாகவே அமைகின்றன.

எனவே, இது விடயத்தில் கவனமெடுத்துஅதனை தடுத்து நிறுத்தவும் கட்டுப்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## மாணவர்களுக்கான இலவச கண் பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், தீவகம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய 5 கல்வி வலயங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான இலவச கண்பரிசோதனை மற்றும்கண்ணாடி வழங்கல் நிகழ்வு எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வேம்படி உயர்தரப் பாடசாலையில் இடம்பெறவுள்ளதாகவும்,

ஏற்ற ஒழுங்குகளைப் பாடசாலைகளை மேற்கொள்ளுமாறும் மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் எஸ். சிவராசா அறிவித்துள்ளார். (உ-19)

## மாவிட்டபுரம் கந்தசுவாமி 15 ஆம் திகதி கொடி

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி அடுத்த மாதம் 8 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

ஆகஸ்ட் மாதம் 7 ஆம் திகதி ரதோற்சவமும் மறுநாள் ஆடி அமாவாசைத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

உற்சவ நாட்களில் திருமுறை ஓதுதல் மகேஸ்வர பூசை என்பனவும் இடம் பெறவுள்ளதுடன்,

அடியார்களின் வசதி கருதி இலங்கை போக்குவரத்துச் சபையால் பஸ் சேவையும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (ஷ)

## மோட்டார் போக்கு வரத்து திணைக்கள பணிகள் 2 நாள் இடை நிறுத்தம்

யாழ் மாவட்ட செயலக மோட்டார் போக்குவரத்து திணைக்களஅதிகாரி வி.பத்மநாதன்கடமைகளின்நிமித்தம் கொழும்பு மோட்டார் போக்குவரத்து திணைக்களத்துக்கு செல்ல இருப்பதனால், இன்றும் நாளையும் புதிய வாகனப் பதிவுகள். சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கல், சாரதி அனுமதிப் பத்திரம் கையேற்றல் மற்றும் பொதுமக்களுடனான தொடர்புகள் நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-6)

## உத்தேசமேல் கொத்மலை நீர்த்தேக்கத் திட்டம் கைவிடப்படவேண்டும்

### புதிய ஜனநாயகக் கட்சி

(கொழும்பு)

உத்தேசமேல் கொத்மலை நீர்த்தேக்கத் திட்டம் கைவிடப்பட வேண்டும். என்றும் தோட்டத்தொழிலாளர்களின் நாட்சம்பளம்ஆகக்குறைந்தது 200 ரூபாவாகஇருக்கவேண்டுமென்றும் இந்தியகடவுச்சீட்டு வழங்கப்பட்டுள்ளவர்களை இந்தியாவுக்கு நாடுகடத்தாது அவர்களுக்கு இலங்கைபிரஜாவுரிமை வழங்க வேண்டும் என்றும் கோரி பரந்துபட்ட மக்கள் இயக்கங்களை முன்னெடுக்க வேண்டும் என்றும் புதிய ஜனநாயக கட்சியின் தேசிய அமைப்பாளர் இ. தம்பையா அறைகூவல்விடுத்துள்ளார்.

இது குறித்துஅவர்வெளியிட்டுள்ள, அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது;

மேல்கொத்மலைதிட்டத்தை கைவிட வேண்டும் என்றும் தோட்டத் தொழிலாளர்களின் நாட் சம்பளம் ஆகக் குறைந்தது 200 ரூபாவாக இருக்க வேண்டும் என்றும்இந்திய கடவுச்சீட்டு வழங்கப்பட்டுள்ளவர்களை இந்தியாவுக்கு அனுப்பக்கூடாது என்றும்பல அமைப்புக்கள் அறிக்கைகளை விட்டும் குரல் எழுப்பியும் ஆர்ப்பாட்டங்களை செய்தும் வருகின்றன.

அவையாவும் ஒன்றிணைக்கப்பட்டு பொதுவான ஐக்கியப்பட்டபோராட்டமாகமுன்னெடுக்கப்பட வேண்டும். அப்போதுதான் அக்கோரிக்கைகளை வென்றெடுக்க முடியும்.

மலையகத் தமிழ் மக்களின் நலனில் அக்கறை கொண்ட எல்லா அமைப்புகளும் பொதுவான முடிவுக்கு வந்து பொதுவான போராட்டங்களைமுன்னெடுக்க வேண்டும்.

சர்வதேச மேல் கொத்மலை நீர்த்தேக்கத்திட்டம் கைவிடப்பட வேண்டும் என்பதே மலையகத்தமிழ் மக்களின் மீதும் இந் நாட்டின் மீதும், சூழலின் மீதும் அக்கறை கொண்டோரின் நிலைப்பாடாக இருக்க வேண்டும்.

நாட்டின் பொருளாதார நிலைமை மோசமாக இருப்பதாக கூறிக் கொண்டு தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பளஉயர்வுவழங்குவதிலிருந்து தோட்டக்கம்பனிகள் விலகிக் கொள்வதை அனுமதிக்க முடியாது. புதிய கூட்டுஒப்பந்தத்தில் தோட்டத் தொழிலாளர்களின் நாட் சம்பளம் 200 ரூபாவுக்கு குறையாமல் உறுதி செய்யப்பட வேண்டும்.

ஸ்ரீமா- சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இந்திய கடவுச்சீட்டு வழங்கப்பட்டுள்ளவர்களை இந்தியாவுக்கு நாடு கடத்தக்கூடாது அவர்களுக்கும் அவர்களின் வழித்தோன்றல்களுக்கும் இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்பட வேண்டும் என்றுள்ளது. (ஷ)

### ஆசிய - பசுபிக் பிராந்தியத்தில்

# இயற்கையின் சீற்றத்தினால் உயிரழிவுகள் அண்மையில் அதிகரிப்பு

(புதுடில்லி)

ஆசிய பசுபிக் பிராந்தியத்தில், இயற்கையின் சீற்றத்தினால் உயிரிழப்புகள் அண்மையில் அதிகரித்துள்ளன.

நேற்று முன்தினம் வீசிய 'சதாஆம்' எனும் சூறாவளியினால் மைக்கோனேசியாவில் 40 உயிர்கள் பலியாகியுள்ளதுடன், பிலிப்பைன்ஸில் 30 பேர் பலியாகியுள்ளனர்.

பிலிப்பைன்ஸில் மேலும் நால்வரைக் காணவில்லை எனவும், 41 பேர் படுகாயமடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி சூறாவளி தற்போது ஜப்பானை நோக்கி நகர்ந்திருப்பதாக அறியப்படுகிறது.

தவிரவும், சீனாவில் வீசிய கடும் காற்றினால் மரங்கள் முறிந்து வீழ்ந்ததில் 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, கடந்தவாரம் இந்திய வட மாநிலத்தில் பெய்த பெரு மழையினால் 6 பேர் பலியாகியதுடன் 1 இலட்சம் பேர் வெள்ளத்தில் சிக்குண்டிருப்பதும்தெரிந்ததே.

இது இவ்விதமிருக்க, தாய்வானில் வீசிய கடும் காற்றினால் 31 மலையேறிகள் காணாமற் போயிருப்பதுடன்; ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அங்கு நிலச்சரிவுகளும் பல இடங்களில் ஏற்பட்டுள்ளன. (உ)

### மலேசிய முன்னாள்

# துணைப் பிரதமருக்கு ஆறு ஆண்டு சிறை

(கோலாலம்பூர்)

மலேசியாவின் முன்னாள் துணைப்பிரதம மந்திரி அன்வர் இப்ராகிமுக்கு எதிரான ஊழல் வழக்குகளில்அவருக்கு வழங்கப்பட்ட 6ஆண்டு கால சிறைத்தண்டனை சரியானது என்று மலேசியாவின்உச்சநீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்ப்பளித்துள்ளது.

பிரதமர் மஹதிர் முகமட்டின் தூண்டுதலின் பேரில் பொய்க்குற்றச்சாட்டுக்கள் தம்மீது சுமத்தப்பட்டதாகக் கூறி, அன்வர் தாக்கல் செய்த மனுவை நீதிபதிகள் அடங்கிய குழு நிராகரித்துள்ளது.

இதேவேளை, மன்னரிடம் மன்னிப்புக் கோருவது அன்வருக்கு இருக்கும் ஒரேவழி என்றும் அவர் மன்னிக்கப்படும் வாய்ப்பு குறைவு என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஷ)

### பாக். பத்திரிகையாளர்

# கொலை குற்றவாளிகளுக்கு தூக்குத்தண்டனை விதிப்பு!

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் பத்திரிகையாளர் டானியல் பேர்ளை கடத்திச்சென்று கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட 4 இஸ்லாமிய தீவிரவாதிகள் குறித்த நீதிமன்ற விசாரணை முடிவுக்கு வந்துள்ளது.

அரச வழக்கறிஞர்கள் இவர்களுக்குத் தூக்குத்தண்டனை விதிக்கவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஷ)

# தென்கொரிய அதிபரின் மகன் மீது இலஞ்ச ஊழல் குற்றச் சாட்டு

(புதுடில்லி)

இலஞ்சம்பெற்றுக்கொண்டதாகவும் வரிவிதிப்பு செய்ததாகவும் தென்கொரிய அதிபர் கிங்கொங்கப் இன் இரண்டாவது மகன் மீது நேற்று முன் தினம் குற்றஞ் சுமத்தப்பட்டது.

எனினும், அதிபர் இக் குற்றச்சாட்டுகளை வன்மையாக மறுத்துள்ளார்.

இதே வேளை, இதேகுற்றச்சாட்டுகளில் அவரது இளைய சகோதரரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

22 இலட்சம் டொலர் பணத்தை தென்கொரிய அதிபர் இலஞ்சமாக பெற்றுக் கொண்டார் என்றும் சில வர்த்தக ஸ்தாபனங்களில் இருந்து பெற்றுக் கொண்ட சுமார் 18 இலட்சம் டொலருக்கு வரி செலுத்தவில்லை என்றும் அவர் மீது குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது. (ஷ)

# உலக தரிசனம்

### விலை உயர்ந்த

# எயிட்ஸ் மருந்துகள் அறிமுகம் எதிர்த்து மக்கள் ஆர்ப்பாட்டம்

(பார்சலோனா)

எயிட்ஸ்நோயைக் கட்டுப்படுத்த மலிவு விலையில்மருந்து வகைகள் அவசியம் என மக்கள் குரல் எழுப்பி வரும் இவ்வேளையில் சுவிஸ், அமெரிக்கா மருந்து உற்பத்தி நிறுவனங்களால்உற்பத்திசெய்யப்பட்ட விலை உயர்ந்த புதிய ரக மருந்துகள்அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இதனால் ஸ்பெயினின் பார்சலோனாவில் நடக்கும் எயிட்ஸ் மாநாட்டுக்கு வெளியே மலிவு விலையில் மருந்துகள் விற்கப்பட வேண்டும் எனக்கோரி ஆர்ப்பாட்டம் நடை பெற்று வருகிறது.

தயாரிக்கப்பட்டஇவ்எயிட்ஸ் மருந்துகள் தாய்லாந்தில் 5 வருடங்களுக்கு பரீட்சிக்கப்படும். அமெரிக்காதாய்லாந்து அரசுகளின் இறுதி முடிவுக்குப் பின்னர் இவை சந்தைப்படுத்தப்படும் எனதெரியவருகிறது. (உ-3)

# இந்திய பொருளாதாரம் 6 வீதத்தால் உயரும் பிரதமர் தெரிவிப்பு

(புதுடில்லி)

பாகிஸ்தானுடனான இராணுவ நெருக்கடி நிலவுகின்ற போதிலும் இந்தியப் பொருளாதாரம் இவ்வருடம் 6வீதத்தால் உயர்வடையும் என பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

தனியார் மயமாக்கல் திட்டங்களை மேலும் தொடருவதற்கும் வெளிநாட்டுமுதலீடுகளை அதிகரிக்கச் செய்யும் நடவடிக்கைகளை எடுப்பதற்கும் திட்டமிட்டிருப்பதாக வாஜ்பாய் மேலும் தெரிவித்துள்ளார். (உ)

### அமெ. சிறைச்சாலையில் இருந்த

# 137 பாக். நாட்டவர் நாடு கடத்தப்பட்டனர்

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்ட 137 பாகிஸ்தானியர்களை அமெரிக்கா இரகசியமான முறையில் நாடுகடத்தியுள்ளது.

கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம்அமெரிக்கா மீதான வர்த்தக மையத் தாக்குதலை அடுத்து சந்தேகத்தின் பேரில் தடுத்துவைக்கப்பட்டிருந்தவர்களை அமெரிக்கா வெளியேறுமாறு உத்தரவு பிறப்பித்தும் அதனை உதாசீனம் செய்தவர்களையே இவ்வாறு நாடு கடத்தியுள்ளது.

இவர்கள் அனைவரும் தீவிரவாதிகளுடன் தொடர்பு வைக்கவில்லையென பாகிஸ்தான் அமெரிக்காவுக்கு அறிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

# பாகிஸ்தான் தேர்தல் ஒக்டோபரில்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் நீண்ட நாட்களாக எதிர்பார்க்கப்பட்டு வந்த நாடாளுமன்றத் தேர்தலை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி நடத்துவதற்கு பாக். அதிபர் ஜெனரல் பெர்வேஷ் முஷாரப் உத்தரவிட்டுள்ளதாக உயர் அரச அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ஷ)

# கசிப்பு விற்பனை செய்த உரும்பிராய் வாசிகளிடம் குற்றப்பணம் அறவீடு

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாக கசிப்பு விற்பனை செய்தார் என்ற சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்ட உரும்பிராய் வாசி தனது குற்றத்தினை ஒப்புக்கொண்டதன் பேரில் 10 ஆயிரம் ரூபா குற்றப் பணம் செலுத்து மாறும் ஆயிரம்ரூபா தர்மப்பணம் செலுத்துமாறும் உத்தர விடப்பட்டதுடன் 15 ஆயிரம் ரூபா ஆள் பிணையில்செல்ல யாழ். மாவட்ட நீதிபதி இ. த. விக்னராஜா நேற்று உத்தரவிட்டார்.

மேற்படி குற்றச்சாட்டில் ஆஜர் செய்யப்பட்ட மேலும் ஒரு உரும்பிராய் வாசியை ஆயிரம்ரூபா குற்றப்பணம் செலுத்துமாறும் உத்தர விடப்பட்டது. (உ-6)

### அமெரிக்காவின்

# இராஜாங்க அமைச்சர் இம்மாதம் பாக். விஜயம்

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் இராஜாங்க அமைச்சர் இம்மாதம் பாகிஸ்தானுக்கானவிஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இந்தியாவுக்கும்பாகிஸ்தானுக்கும் இடையே நிலவும்பதற்ற நிலையை தணிப்பதைநோக்கமாகக் கொண்டே இவர் இவ் விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்

ஜூலை மாதம்31 ஆம்திகதி முதல் ஆகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள ஆசிய நாடுகளின்மாநாட்டிலும்கலந்து கொள்ளும் இவர் பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கும்செல்லவுள்ளார். (உ8)

### பேராதனைப் பல்கலை

# வெளிவாரிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

பேராதனைப் பல்கலைக் கழகத்தின் வெளிவாரிப் பரீட்சை ஒகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி தொடக்கம் 26ஆம் திகதி வரை யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சைக்குரிய அனுமதி அட்டைகள் மாணவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (உ-19)

# இந்தியா மத்தியஸ்தம் வகிக்காது

(கொழும்பு)

தாய்லாந்தில் நடைபெறவுள்ள அரசு புலிகள் பேச்சுவார்த்தையில் இந்தியா மத்தியஸ்தம் வகிக்காதென வெளிவிவகார பேச்சாளர் நிருபமா ராவ் தெரிவித்துள்ளார். (உ)

# வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள்அலகும்திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கி வரும் திரைப்படக் காட்சித் தொடரில் சார்லி சப்ளின் CHARLES CHAPLIN இயக்கிய CITYLIGHTS எனும் திரைப்படம் நாளை சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்குபுவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

ஆர்வலர்கள்எவரும் கலந்து கொண்டு பயன்பெறலாம்என புறநிலை படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவி துள்ளார். (ஷ)

# ம. தி. மு. க தொண்டர்கள் கைது முறைகேடானது

### மத்திய அமைச்சர் கண்ணப்பன்

(புதுடில்லி)

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழக எட்டு உறுப்பினர்கள் போடோ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டமை, தமிழ் நாட்டில் தமது கட்சித் தலைவர்களுக்கும் தொண்டர்களுக்கும் எதிராகஇந்தசட்டம் முறைகேடாகப் பயன்பட்டதன் விளைவு என்றும் இதை மத்திய அரசு தடுக்க வேண் என்றும் ம. தி. மு. க வைச் சேர்ந்தவரும் மத்திய மரபுசாரா எரிசக்தி வழங்கல் அமைச்சருமான கண்ணப்பன் கேட்டுள்ளார்.

இதேவேளை போடோ சட்டம் ம.தி.மு.க வினருக்குஎதிராகமுறைகேடாக பிரயோகிக்கப்பட்டுள்ளது. என பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த விஜயகுமார மல்கோத்ரா குற்றஞ்சாட்டியுள்ளார். (ஷ)

# தமிழ்த்தினப் போட்டி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்டக் கல்விப் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்தினப் போட்டிகள் இன்றைய தினம் காலை 9 மணிக்கு யாழ். இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறுமென நல்லூர் கோட்டக் கல்வி அதிகாரி அறிவித்துள்ளார். (உ-19)

# 'வெளிப்பு'

### வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

க. தணிகாசலம் எழுதிய 'வெளிப்பு' கவிதை நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் கவிஞர் இ. முருகையன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நூலின் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத்தலைவர்பேராசிரியர் அ. சண்முகதாஸும், மதிப்புரைகளை யாழ். பல்கலைக்கழக மெய்யியற்றுறைத் தலைவர் கலாநிதி சோ. கிருஷ்ணராஜா கவிஞர் கல்வயல் வே. குமாரசாமி ஆகியோரும் ஆற்றவுள்ளனர். (ஷ)

செய்வானை நாடிவினை
நாடிக் காலத்தோடு
எய்த உணர்ந்துசெயல்
குறள்

# வலம்புரி

## ஜனாதிபதியின் சந்தேகம்

அரசும் - விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தி சமாதானத் தீர்வைக் காண்பார்களென்பது தற்போது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாக, ஜனாதிபதி கூறியுள்ளார்.

பேச்சுவார்த்தைக்கான காலம் கடந்து செல்வதை வைத்தே சந்தேகம் அனுமானிக்கப் பட்டிருப்பதாக ஜனாதிபதியின் பேச்சாளர் ஹரிஸ்பீரிஸ் கூறியுள்ளார்

இனப்பிரச்சினை மற்றும் அரசு - புலிகள்பேச்சு தொடர்பாக ஜனாதிபதியின் நிலைப்பாட்டைப் பொதுமக்களுக்கு அறிவிக்கும் வகையில் ஜனாதிபதியின் பேச்சாளர் ஹரிஸ்பீரிஸினால் நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் ஜனாதிபதியின் மற்றொரு கருத்தும் முன் வைக்கப்பட்டிருந்தது.

அதாவதுகாலம் தாழ்த்தாது அரசும், விடுதலைப்புலிகளும் உடனடியாகப் பேச்சுவார்த்தையை நடத்த வேண்டுமென்பதே அங்கு முன் வைக்கப்பட்ட ஜனாதிபதியின் கருத்தாகும்.


சமாதானப் பேச்சுவார்த்தையை விரைவுபடுத்துமாறு முன்வைக்கப்பட்ட ஜனாதிபதியின் கருத்து எந்தக்கோணத்தில் - எந்த நோக்கத்தில் இருந்து கூறப்பட்டது என்பதை ஆராய்வதை விடுத்துப் பொதுநோக்கில் பார்ப்போமானால் ஜனாதிபதியின் கருத்து நியாயமானதாக - காலம் உணர்ந்து கூறப்பட்டதாக உள்ளது.

அதேவேளை, விரைவாகப் பேச்சுவார்த்தை நடத்துமாறு ஜனாதிபதி கூறியிருப்பதன் மூலம் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும் என்பதையும் ஜனாதிபதி ஏற்றுள்ளார் எனஅரசுகருதிக்கொள்ள முடியும்.

ஏனெனில் விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தை என்பது அவர்கள் மீதான தடையை நீக்குவதன் மூலமே சாத்தியமாகும்.

சுருங்கக் கூறின் விரைவாகப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமெனக் கூறி சர்வதேசத்தின் மத்தியில் தனது நன்மதிப்பைக் குறையவிடாது பாதுகாக்கும் ஜனாதிபதியைப் போன்று பிரதமர் ரணிலும் தனது சமாதான முயற்சியை முன்னெடுத்துத் தனது நன்மதிப்பைப் பாதுகாத்துக் கொள்வது நல்லது.

# ஆலய நிர்வாகங்களுக்கு எடுத்துக்காட்டாக வில்லூன்றி விநாயகர் ஆலயம் விளங்குகின்றது



## வெள்ளி நற்சிந்தனை

நயினை
**நா. கோபாலகிருஷ்ணன்**

பூர்வ தனுஸ்கோடி என்று போற்றப்படும் தெய்வீகத் திருத்தலம் தான் யாழ். வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலயம். மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற வரலாற்றுச் சிறப்பைத் தன்னகத்தே கொண்டு அடியவர்க்கு அருள் பாலிக்கும் வில்லூன்றி வீரகத்தி விநாயகப் பெருமானின் தெய்வீகத் திருவருளில் அள்ளுண்ட அடியவர்கள் அகிலம் அனைத்திலும் அல்லல் அற்று அருள் வழியில் வாழ்கின்றனர். ஔவை கேட்ட முத்தமிழையும் வேண்டுவோர்க்கு வாரிவழங்குகின்ற ஞானமூர்த்தியாக எம்பெருமான் வில்லூன்றியில் வீற்றிருந்து அருள்பாலிக்கின்றான்.

### வரலாற்றுச் சிறப்பு

இராமாயணத்துடன் தொடர்புடைய வரலாற்றுச் சிறப்பைக் கொண்டது இவ்வாலயம். இராவணனைச் சங்காரம் செய்த இராமபிரான் வில்லை ஊன்றி வெளிப்பட்ட தீர்த்தத்தில், தீர்த்தமாடி வீரத்தைத் தந்த விநாயகனை வழிபட்டார் என்பதாகத் தல வரலாறு. இந்தியாவில் இராமேஸ்வரத்தைச் சுற்றி இராம தீர்த்தம், சீதா தீர்த்தம், இலட்சுமண தீர்த்தமெனப் பல தீர்த்தங்கள் உண்டு. அத்தீர்த்தங்களில் தீர்த்தமாடியவர்கள் யாழ். வில்லூன்றி புனித தீர்த்தத்திலும் தீர்த்தமாடுவார்களானால் பூர்வ தனுஸ்கோடி தீர்த்தங்களிற்கும், யாழ். வில்லூன்றி புனித தீர்த்தத்திற்கும் பூர்வீகத் தொடர்பு நிச்சயமாக உண்டு என்பதை உணர்வார்கள். எனவே, வரலாற்றுச் சிறப்பை நிதர்சனமாக்கி அன்றும் இன்றும் மிளிர்வது வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலயம்.

விநாயகப்பெருமானின் அற்புதங்கள் பலவுண்டு. 1999 ம் ஆண்டு விநாயகர் விரதத்தின் போது ஒரு சில ஆலய நகைகள் திருட்டுப் போயின. 2000 ஆம் ஆண்டு தேர்த் திருவிழாத் தினத்தன்று திருடர்கள் அகப்பட்டுத்திருட்டை ஒப்புக்கொண்டு அதற்குரிய பணத்தை வழங்கினார்கள்.

### ஆகமவிதிக்கமைய நிர்வாகம்

யாழ். குடாநாட்டில் உள்ள பல்வேறு ஆலய நிர்வாகத்தினருக்கெல்லாம் ஓர் முன் உதாரணமான நிர்வாகமாக யாழ். வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலய நிர்வாகம்திகழ்கின்றது. இந்துஆகம விதிமுறைக்கமைய ஆலயங்கள் நிர்வகிக்கப்பட வேண்டும் என்பதைச் செயலில் காட்டி நிர்வகிக்கப்படுகின்றது. நீதிமன்ற நிர்வாகத்திற்கு எப்படிச்சட்டம் முக்கியமானதோ அதே போன்று ஆலய நிர்வாகத்திற்கும் ஆண்டவனால் அருளப்பட்ட இந்து ஆகம விதிமுறை முக்கியமானது.

வடமொழியும் தென்தமிழும் ஆயினான் காண் என்று அப்பரடிகள் சொன்னவாறு திருமுறைகள் பண்ணோடு ஓதப்படுகின்றன. அர்ச்சனை பாட்டேயாகும் என்று சேக்கிழார் பெருமான் சொன்னவாறு தேவாரத்தால்எம்பெருமான்அர்ச்சிக்கப்படுகின்றார். 'வான்முகில் வழாது பெய்க' என்ற கச்சியப்பர் பாடல் எப்பொழுது பாடப்பெற வேண்டும் என்பதற்குமுன் உதாரணமாக இவ்வாலயத்தில் ஓதப்படுகின்றது. பஞ்சபுராணம் ஓதப்பட்டபின் குருக்களின் ஆசீர்வாதத்தின் பின்தான்கச்சியப்பரின் வான்முகில்வழாது பெய்க என்ற பாடல் ஓதப்பட்டு வசந்த மண்டபப் பூசை நிறைவு செய்யப்படுகின்றது. இலங்கையைப் பொறுத்தமட்டில் இவ்வாலயத்தில்தான் இந்த முறையில் ஓதப்படுகின்றது. எல்லா ஆலயங்களிலும் இம்முறையில்திருமுறைகள் ஓதப்பட்டால் சொற்றமிழால் எம்பெருமானை வழிபட்ட பெரும் பயனை அடையலாம். சிலஆலயங்களில் யாகத்தில் (ஈசானத்தில்) கூட வான்முகில் வழாது பெய்க பாடப்படுகின்றது.

திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளின் தொடர் கதாப்பிரசங்கங்கள் இவ்வாலயத்தில் அந்நாளில் நடைபெற்றுள்ளன சைவப்பெரியார் அமரர் சோ. இராசரெத்தினம் அவர்களால் ஆலயமும் தீர்த்தக் கேணியும் அன்றுபரிபாலிக்கப்பட்டு வந்துள்ளன. தற்போதுஅவரின் புதல்வர்பேராசிரியர் இ. குமாரவடிவேல் தலைமையில் ஆலயநிர்வாகம் திறம்பட நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. ■

# யாழ். மண்ணில் தொழில்சார் கற்கைநெறி முன்னேற்றம் காண ஒத்துழைப்பது அவசியம்

**எஸ். வசந்தகுமார்**

முழு உலகமும் ஒரு பூகோள கிராமமாக சுருங்கி வரும் ஓர் பின்புலத்தில் உலகளாவிய ரீதியில், நாடுகளின் பொருளாதாரங்கள் ஒன்றில் ஒன்று தங்கியிருக்கும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது. தகவல் தொழில் நுட்பஅபிவிருத்தியின் விளைவாக உலகமயமாக்கலின் அளவு ஆனது விரைவாக்கப்பட்டுள்ளது. தகவல் நொழில்நுட்பப் புரட்சியின் விளைவாக வர்த்தக உலகிலும் பல மாற்றகள் உருவாக்கப்பட்டுள்ளன. உதாரணமாக E. Commerce, M.Commmerce, E.Banking, D.Commerce என பல வித உருவங்களில் மாற்றம் பெற்று நடைமுறைக்கு வருகின்றன, அத்துடன் இன்று உலகில் முகாமைத்துவத்திலும் பல்வேறுபட்ட மாற்றங்கள் கொண்டுவரப்பட்டு கணனியினூடாக முகாமைத்துவ தகவல் பரிமாற்றமும் அதனுடனான உற்பத்தி, செய்முறை விற்பனை, சந்தைப்படுத்தல், இருப்புக்கட்டுப்பாடு, கணக்கியல் அறிக்கையிடல் என்பது போன்ற அனைத்து முகாமைச்செயற்பாட்டையும் உள்ளடக்கியதாக MRP System உருவாக்கப்பட்டுள்ளது. இத்தகைய புதிய தகவல்களை அறியக்கூடிய நிலைமை இதுவரையும் வட பகுதிமாணவர்களுக்கு கிடைக்க வில்லை என்றே கூறலாம்.

### தொழில் சார் கற்கை நெறி

இது வரை காலமும் வட பகுதி மாணவர்கள் க.பொ.த, (சாதாரணம்) உயர்தரம், பல்கலைக்கழகம் அல்லது தொழில் நுட்பக் கல்லூரி அல்லது உயர் தொழில் நுட்பக் கல்லூரி என்ற வகையில் தமது கல்வியை போதியளவு பெற்றுக் கொள்ளக் கூடிய சூழ் நிலை இருந்து வந்துள்ளது. ஆனால் தொழில்சார் கல்வி என்ற கல்வி அமைப்பானது இது வரைக்கும் வட பகுதி மாணவர்களுக்கு பெரும்பாலும் எட்டாக் கனியாகவே இருந்துள்ளது. மருத்துவபீட, சட்டபீட, பொறியியல் பீடமாணவர்களை தவிர ஏனைய துறை சார்மாணவர்கள் ஒரு தொழில்சார் கற்கை நெறியைபயிலமுடியாத சூழ்நிலைகாணப்பட்டுள்ளது. அத்துடன் தொடர்ச்சியான யுத்தமும் அதன் விளைவான இடப்பெயர்ச்சிகளும் பெருமளவிலான மூளைசாலிகளது வெளியேற்றமும் தனியார் துறையின் வளர்ச்சியின்மையும், வேலைவாய்ப்பற்ற நிலைமையும் வடபகுதி மாணவர்களுக்கு தொழில் சார் துறையின் முக்கியத்துவத்தினை உணர்த்த தவறியது. இன்றைய சூழ் நிலையில் மாணவ சமுதாயத்திற்கு ஓர் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டிய சூழ்நிலையிலும் எதிர்காலத் தேவையை பூர்த்தி செய்யக் கூடிய நிலையிலும், எதிர்காலச்சவால்களைச் சமாளிக்க கூடியநிலையிலும், ''Istitute of Profe ssi onal Accounting studies'' நிறுவனம் ஆனது வட பகுதி மாணவர்களுக்கு தொழில் சார் கற்கை நெறிகளை அறிமுகப்படுத்துகின்றது. இந் நிறுவனமானது இலங்கையிலும், இங்கிலாந்திலும் உள்ள தொழில் சார் நிறுவனங்களுடன் நேரடியான தொடர்பினை கொண்டுள்ளது. இந் நிறுவனத்தின் நோக்கம் சிறந்த தலைமைத்துவ ஆற்றலை வளர்ப்பதும் தொழில் சார் கல்வியை மாணவர்களுக்கு புகட்டுவதும், ஆங்கில தேர்ச்சியை வளர்ப்பதும், ஆக உள்ளது.

(3 ஆம் பக்கம் பார்க்க)

## தினசரி தியானம்

### சுயேச்சை

நாமார்க்கும் குடியல்லோம்
நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம்
நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணி அறிவோம்
பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பமில்லை.

- அப்பர்


செம்பொருளே, உனக்கும் எனக்கும் உள்ள தொடர்பைப் பிரிக்கவல்லவர் யார்?

நம்மைத் துன்பத்தில் தளைப்பதும், துன்பத்தளையினின்று விடுவிப்பதும் நமது எண்ணம். சங்கிலியில் கட்டுண்டு கிடந்து சித்திரவதை செய்யப்படும் அடிமை ஒருவன் தனது சுயேச்சையின் வலிவால் உடலின் வேதனையைக் கடந்தவன் ஆய்விடலாம்; அத்தகையவனை யாரும் கட்டுப்படுத்த முடியாது. சுயேச்சையுடைய ராஜா ஒருவனை ராஜபோகம் கட்டுப் படுத்தாது. பந்தத்திலோ, போகத்திலோ கட்டுப் படாதவனே உண்மையான மனிதன்.

- ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்.


# வடக்கின் மாபெரும் துடுப்பாட்டம்

## யாழ் மத்திய கல்லூரி அணி



இடமிருந்து வலமாக இருப்பவர்கள்:- எஸ்.காண்டீபன் (பயிற்றுவிப்பாளர்), வி.எஸ்.மகேந்திரன் (விளையாட்டுத்துறை பொறுப்பாளர்), எஸ்.கார்த்தீபன் (அணித் தலைவர்), கே.இராசதுரை (அதிபர்), வி.ரஜீவ்குமார் (உப தலைவர்), கே.றொகான், இ.எவ்.ஆர்.ஜெயக்குமார் (பொறுப்பாசிரியர்.)
இடமிருந்து வலமாக நிற்பவர்கள்:- ஏ.ஜசிந்தன், ஆர்.மதுசன, சி.ரஜீவ், கே.கார்த்திக், எஸ்.துசாந்தன், எஸ்.தினேஷ், எஸ்.பிரசாத், எஸ்.விமலகாந், எஸ்.சிவகுமார், ஆர்.சியோன், வி.கபில்தேவ், எஸ்.பிரதீபன், ஏ.டரன், எஸ்.துசியந்தன்.

## சென்.ஜோண்ஸ் கல்லூரி அணி



இடமிருந்து வலமாக இருப்பவர்கள்:- ஜே.அமலசீலன் (உப அதிபர்), சி.அகிலன், பி.லவேந்திரா (அணித் தலைவர்), எஸ்.தனபாலன் (அதிபர்), வி.விஷ்ணுவரதன் (உப தலைவர்), எஸ்.ராஜாராம், கே.எஸ்.முகுந்தன் (பயிற்றுவிப்பாளர்),
இடமிருந்து வலமாக நிற்பவர்கள்:- எஸ்.ரஜீவன், ரீ.மதன்ராஜ், ரீ.சி.அன்ட்ரூ, கே.விசாகன், ஏ.நிரோசன், ஏ.தனஞ்சியன், இ.எஸ்.வில்சன், எஸ்.கிருஷ்ணகுமார், ஏ.அன்புஜன், சி.டினேஷ்.

### இலங்கைத்...

பாட்டை இலங்கையில் ஆதரிக்கின்றோமே தவிர நாட்டில் வன்முறைகளை நாங்கள் தூண்டிவிடவில்லை என்றும் கூறிய வைகோ போடோ சட்டத்தின் கீழ் என்னைக் கைது செய்வதன் மூலம் தமிழ் நாட்டில் மக்களின் அன்றாடப்பிரச்சினைகளை திசை திருப்புவதற்கான நாடகத்தை ஜெயலலிதா நடத்திவருகின்றார் என்று குறை கூறினார். (ந)

### நம்பிக்கையில்லா...

நாயகரிடம் கையளித்துள்ளனர்.

இதேவேளை அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை பாராளுமன்றில் நான்கு நாட்கள் விவாதிக்க அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது. (இ)

### புலி உறுப்பினர்களை...

மாவட்டத்தில் கடந்த காலங்களில் எமது அமைப்பைச் சேர்ந்த 8உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.இவ்வாறான சம்பவங்கள் இனியும் இடம்பெறாத வண்ணம் நடவடிக்கை மேற்கொள்வதாக கண்காணிப்புக்குழு உறுதியளித்துள்ளதாகவும் கூறினார்(த)

### அமெரிக்க...

யாளர்களுக்கு தெரிவிக்கையிலேயே அமைச்சர் பீரிஸ் மேற்கண்டவாறு பெருமையடைந்தார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங்காவின் இலங்கை விஜயம் சமாதான முயற்சிகளுக்கு பக்க பலமாக அமைந்துள்ளது என்றும் கூறினார். (இ)


**இலங்கை மின்சார சபை - யாழ்**
**பிரதேச அலுவலகம்**

**மின்தடை பற்றிய அறிவித்தல்**

நாளை (2002.07.13) சனிக்கிழமை சுன்னாகம் மின் நிலையத்தில் திருத்த வேலைகள் நடைபெற இருப்பதால் அன்றைய தினம் யாழ். குடாநாடு பூராகவும் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 05.00 மணிவரை மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்பதனை அறியத் தருகின்றேன்.

இதனால் மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகிறேன்.

பிரதேச மின் பொறியியலாளர்
இலங்கை மின்சார சபை,
யாழ். பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்.

''சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும''
இலங்கை மின்சார சபை. [C/4652]



**யாழ் பல்கலைக்கழகம்**

**கேள்விப் பத்திர அறிவித்தல்**

**70 GSM கனதியான கென்யோ பாங்க் பேப்பர் (வெள்ளை நிறம்) வழங்கல் - 100 றீம்கள்**

யாழ் பல்கலைக்கழகத்திற்கு 70 GSM கனதியான கென்யோ பாங்க் பேப்பர் 100 றீம்கள் வழங்குவதற்கு தகுதிவாய்ந்த வினியோகஸ்தர்களிடம் இருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்விப் பத்திரதாரர் மீளளிக்கத் தகாத வைப்புப் பணமாக ரூபா 250/=ம் மீளளிக்கும் வைப்புப் பணமாக ரூபா 2500/=ம் நிதிக் கிளையில் பணமாகச் செலுத்தி, அதற்கான பற்றுச் சீட்டுடன் மாதிரிப் பேப்பரும் இணைத்து கேள்விப் பத்திரத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் நிதியாளர், யாழ் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என முகவரியிடப்பட்டு 25.07.2002 பிற்பகல் 2.00 மணிக்கு முன்பதாக, பதிவுத் தபால் மூலமாகவோ அன்றி நேரடியாகவோ சமர்பிக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் உறையில் "70 GSM கனதியான கென்யோ பாங்க் பேப்பர் (வெள்ளை நிறம்) வழங்கலுக்கான கேள்விப் பத்திரம்'' எனக் குறிப்பிடப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அன்றைய தினம் 2.30 மணிக்கு யாழ் பல்கலைக்கழக சபை அறையில் திறக்கப்படும்.

பதிவாளர்
யாழ் பல்கலைக்கழகம் [C/4654]


# ம.தி.மு.க செயலர்...

வைத்து வை.கோவை போடோ சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவதை மகாராட்ன அரசு விரும்பவில்லை இதனாலேயே வைகோ சென்னை விமான நிலையத்தில் வந்திறங்கிய பின் கைது செய்யப்பட்டார்.

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வைகோ வந்திறங்கிய போது ம.தி.மு.க தொண்டர்கள் எவரும் விமான நிலையத்திற்குள் நுழைய அனுமதிக்கப்படவில்லை.

விமான நிலையத்திலும், விமான நிலையத்திற்கு வெளியேயும் பெருமளவு பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது.

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வந்திறங்கிய வைகோ சுமார் 45நிமிடங்கள் தனது குடும்பத்தினரோடும் கட்சியின் மத்திய அமைச்சர்களுடனும் கலந்துரையாடியதுடன் தான் கைது செய்யப்பட்ட பின் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் ஆலோசனை நடத்தியிருந்தார்.

சென்னை மீனம்பாக்கம் விமான நிலைய மண்டபத்தில் ம.தி.மு.கவின் மத்திய அமைச்சர்களுடன் கலந்துரையாடி விட்டு வெளியே வரும் போது திருமங்கலம் நீதிமன்ற நீதிவான் பிறப்பித்திருந்த கைது செய்யும் உத்தரவுப் பத்திரத்தை வைகோவிடம் மதுரைப் பொலிஸார் காட்டி கைது செய்ய முற்பட்ட போது வைகோ தனது ஆதரவாளர்களுக்கு இரு கைகளையும் உயர்த்திக் காட்டி விட்டு சிரித்த முகத்துடன் தன்னைக் கைது செய்ய வழிவகுத்தார்.

இதனை அடுத்து அவர் பொலிஸாரினால் திருமங்கல நீதிமன்றத்திற்கு பலத்த பாதுகாப்புடன் கொண்டு செல்லப்பட்டு அங்கு ஆஜர் செய்யப்பட்ட பின்னர் மதுரை மத்திய சிறைச்சாலையில் காவலில் வைக்கப்பட்டுள்ளார். (வ)


எம்.டி.குணசேன

**புத்தகக் கண்காட்சியும்**
**மாபெரும் விற்பனையும்**

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில்

இன்றுயூலை 12ம் திகதி 2.30க்கு ஆரம்பமாகி 15ம் திகதி வரை நடைபெறும்.

கல்லூரி அதிபர் திரு. எஸ்.சேதுராஜா தலைமையில் வடமராட்சி விடுதலைப்புலிகள் அரசியற் பிரிவுத் தலைவர் திரு. தயா, திரு. த.சிதம்பரப்பிள்ளை ஆசிரியர் மற்றும் கல்வியாளர்கள், படைப்பாளிகள், நிர்வாகத்துறை யாளர்கள் இன்று மங்கல விளக்கேற்றி நிகழ்வைத் தொடக்கி வைப்பார்கள்.

எல்லா நூல்களுக்கும்
10% விலைக்கழிவு!
[C/4653]



**இடம்மாற்றம்**

அனைத்து கொம்பியூட்டர் ஓவ்(f)செற் பிறிண்டிங் வேலைகளுக்கும

**கங்கை**
ஓவ்(f)செற் பிறிண்டேர்ஸ

184A, நாவலர் வீதி,
பெருமாள் கோவிலடி,
யாழ்ப்பாணம்.


# மரண அறிவித்தல்

## ஆறுமுகம் நவரத்தினம்

தொல்புரத்தை பிறப்பிடமாகவும் சங்கானை ''இரத்தின வாசா"வை வசிப்பிடமாகக் கொண்டவரும் முன்னாள் வெஞ்சர் நோவூட் நவரத்தினம் கொம்பனி உரிமையாளருமான ஆ. நவரத்தினம் 96வது வயதில் (11.07.2002) நேற்று சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் வள்ளியம்மை தம்பதியினரின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் சுந்தரம்பிள்ளை தம்பதிகளின் அருமை மருமகனும், காலஞ்சென்றவர்களான நாராயணசாமி, மங்கையற்கரசி, ரத்தினம்மா மற்றும் குமாரசாமி (சட்டத்தரணி), தங்கரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவராஜேஸ்வரி, காலஞ்சென்ற இலங்கைநாதன், இரத்தினேஸ்வரி *(Colombo)*, சிவனேஸ்வரி *(Colombo)*, சற்குணநாதன் *(Commercial Printing Manager, Lake house)*, பரமநாதன் *(Niranjanas* உரிமையாளர்), ஞானேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சிவராஜேஸ்வரன், சிவானந்தன் *(Retaired Maharajan Organization)*, நவரட்ணம் *(Malavans)*, கணேசலிங்கம் *(Formar Technical Officer Oman)*, நாகபூஷணி, விஜயகுமாரி *(Australia)*, யசோதரா ஆகியோரின் அன்பு மாமனாரும், முத்துலட்சுமி, காலஞ்சென்ற வேலுப்பிள்ளை, சாந்தினி *(Swiss)*, காலஞ்சென்ற ரஞ்சனி, இந்திரன்*(London)*, ராஜீ *(Australia)*, சிவகரன்*(London)*, சிவாஜினி*(Germany)*, சிலோஜினி *(NIBM Colombo)*, ஜெயந்தி, ரமணன், பிருந்தா, இந்து *(Australia)*, ஜனன்(அவுஸ்திரேலியா), பாமினி, சுகந்தினி ஆகியோரின் அன்புப் பேரனும், மதினா, பிருந்தா, அபிநயா*(Swiss)*, ரஜித்த *(Colombo)*, விக்கினசாயி *(Australia)*,சிவசாயி*(Australia)*, விதுஷன*(Germany)*, அபிராம் *(Germany)*, அராஷன் *(Germany)* அஷ்வின்சாயி *(Colombo)* ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் (12.07.2002) இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் ஈமைக்கிரியைகள் நடைபெற்று வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இத்தகவலை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

"இரத்தின வாசா"
200, பொன்னாலை வீதி,
சங்கானை

தகவல்
ந.பரமநாதன் J.P
(மகன்)

[5672]

இப்பத்திரிகை வலம்புரி அன். கௌ ஸ்தாபனத்தினரால் இல...5, ........நதெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.07.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.